# நம்வழி வேளாண்மை

பருவம் 33 | ஜூலை – செப்டம்பர் 2025 | இதழ் : 2




**மதுரை தானம் அறக்கட்டளை மூலமாக 12 வது கூடல் அரங்க நிகழ்ச்சி செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதியிலிருந்து 21 வரை மதுரையில் நடைபெற்றது. இதில் சர்வதேச மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டு 2026 பற்றிய கூட்ட கலந்துரையாடல்**

*இயற்கைவழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

# நம் வழி வேளாண்மை

பருவம் 33 ஜூலை – செப்டம்பர் 2025 இதழ் 2

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**


**நம் வழி வேளாண்மை தத்துவம்**

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே


**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலைபேசி : 0452– 2380082, 9344523892.
இமெயில் : vivekseva@gmail.com
இணையதளம் : www.sevango.in

**ஆங்கில இதழ் முகவரி**
Prof. Anil Gupta,
**Honey Bee,**
SRISTI, AES Boys Hostel Campus,
Near Gujarat University Library & SBI Bank,
Navrangpura, Ahmedabad-380 009, Gujarat,
email: honeybee@sristi.org


## எளிமையான தொழில் மூலம் கிராம மக்களின் வருமானம் கூட்டுதல்



இன்று பல தொழில் முனைவோருக்கு அரசும், தனியாரும் ஊக்குவிக்கும் ஸ்டார்ட்அப் பிரபலமாகி வருகின்றது. உழவர் உற்பத்தியாளர்கள் குழு, கம்பெனி போன்றன நாடெங்கிலும் துவங்கப்பட்டு செயல்படுகின்றன.

இராஜஸ்தானில் ஆஜ்மீர் மாவட்டத்தில் திரு. ஜெகதீஸ் குர்ஜார் என்பவர் பட்டபடிப்பு படித்துவிட்டு சமூக பணியாளராக பணியாற்றி வந்தார். இவர் 1000 பெண்களை உறுப்பினர்களாக்கி உழவர் உற்பத்தியாளர் கம்பெனி நடத்தி வருகிறார். இவருடைய முயற்சியினால் உள்ளூர் ஆடு மேய்ப்பவர்கள் 30 –60 சதவீதம் கூடுதல் வருமானம் பெறுகின்றனர். ஆடுகளின் இறப்பு விகிதம் 40 சதவீதம் குறைந்துள்ளது. சிரோகி என்ற உள்ளூர் ரக ஆட்டு இனத்தை மக்களிடையே தருவித்து இதன் மூலம் வருமானம் கூடி உள்ளது. வருடத்தில் 3 மாதங்கள் குறிப்பாக மழை காலத்தில் கிடைக்கும் மிஞ்சும் ஆட்டு பாலை கம்பெனி மூலம் தினமும் 200 லிட்டர் ஆஜ்மீர் நகருக்கு விநியோகித்து வருகிறார். ஒரு லிட்டர் விலை ரூ. 200 க்கு கொடுக்கப்படுகிறது. ஆட்டு புழுக்கையை கிலோ ரூ. 10 க்கு வாங்கி நகர்புறங்களில் உர பொட்டலமாக ரூ. 50 க்கு விநியோகிக்கிறார். மாதத்திற்கு சுமார் 1000 கிலோ விற்பனை செய்யப்படுகிறது. பால், உரம் போன்றவற்றை மகளிர் குழு உறுப்பினர்களே கொள்முதல் செய்து கொடுக்கின்றனர். இவருடைய 15 வருட சேவையை பாராட்டி இவருக்கு பீஸ்மாச்சாரியார் விருது, பரிசு தொகை ரூ. 25000 மும் 29.9.2025 அன்று லக்னோவில் வெள்ளாட்டு அறக்கட்டளை (The Goat Trust) மூலம் வழங்கப்பட்டது. எளிமையான தொழில் மூலம் கிராம மக்களின் வருமானம் கூட்டுதலை பாராட்டுவோம்.

இவரை பற்றிய மேலும் விவரம் 23 ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## பொதுஇடங்கள், மேய்ச்சல் நிலங்களை பாதுகாக்க நாம் செய்ய வேண்டியன



உலகில் பொது இடங்கள் குறிப்பாக மேய்ச்சல்நிலம் உள்ளூர் நிலைகளை அடங்கிய பகுதி பூமியில் சுமார் பாதிபரப்பில் படர்ந்துள்ளது. இதை நம்பி வாழும் ஏழைக்குடும்பங்கள், கால்நடை வளர்க்கும் சமூகத்தினருக்கும் வாழ்வாதரமாக உள்ளது. ஆனால் இந்த நிலங்களை உதவாநிலம், மற்றும் பிற வளர்ச்சி பயன்பாட்டிற்காக பயன்படுத்தப்படும் இடமாக மாற்றப்படுவதால் இந்த பொது இடங்களின் பரப்பளவு நாளுக்கு நாள் குறைந்து வருகின்றது. இந்தியாவில் 17 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பிலிருந்து புல் வெளிப்பகுதி தற்சமயம் 14 லட்சம் ஹெக்டேர் நிலமாகக் குறைந்துவிட்டது. இதனை சரிக்கட்டி இருக்குமிடத்தையாவது இழந்துவிடாமல் இருப்பதற்கு 2026 ம் ஆண்டை சர்வதேச மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டாக ஐ.நா.சபை பொதுக்குழு பிரகடனம் செய்துள்ளது.

அக்டோபர் பதினோராம் தேதி (11.10.2025) அல்லது பின்னர் நடைபெறும் கிராம சபை கூட்டத்தில் கீழ்கண்ட வாசகத்தை தீர்மானமாக கொண்டு வரலாம். கிராம வரைபடம் தயாரித்து அதில் பொது இடங்கள், மேய்ச்சல் நிலங்கள், நீர்நிலைகள் ஆகியவற்றை அனைவருக்கும் தெரியப்படுத்தும் விதமாக பஞ்சாயத்து அலுவலகத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும். உச்ச நீதிமன்றம் தீர்ப்பு எண் 3109/2011 தேதி 28.1.2011 படி மேய்ச்சல் நிலங்களை பிற பயன்பாட்டிற்கு மாற்றுவதை தவிர்க்க வேண்டும்.

மதுரை தானம் அறக்கட்டளை மூலமாக 12 வது கூடல் அரங்க நிகழ்ச்சி செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதியிலிருந்து 21 வரை மதுரையில் நடைபெற்றது. இதில் பல்வேறு மாநிலங்களில் இருந்து சுய உதவி குழுக்கள்,விவசாயிகள், உற்பத்தியாளர்கள், குழுக்கள்/ நிறுவனங்கள், தொண்டு நிறுவன களப்பணியாளர்கள் அரசு பணியாளர்கள், வல்லுநர்கள், விஞ்ஞானிகள் பலர் கலந்து கொண்டு 41 கருத்தரங்கு அமர்வுகளில் தங்கள் கருத்துக்களை பதிவு செய்தனர். சேவா தொண்டு நிறுவனம் மூலம் கிராமப்புறங்களில் மேய்ச்சல் நிலங்கள், நீர்நிலைகள் போன்ற பொது இடங்களை பாதுகாத்தல் மற்றும் சர்வதேச மேய்ச்சல் நிலம் மற்றும் கிடைக்காரர்கள் ஆண்டு 2026 ஐ கொண்டாடும் செயல் திட்டம் பற்றிய நிகழ்வு செப்டம்பர் 21 ஆம் தேதி நடைபெற்றது.



இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

1. பொது இடங்கள் உள்ளடக்கிய கிராம வரைபடம் ஒவ்வொரு பஞ்சாயத்து அலுவலகத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்.
2. கன்மாயில் அடர்த்தியாக நடப்பட்ட நாட்டு கருவேலை மரங்களினால் கால்நடைகளை சுதந்திரமாக மேய்க்க முடியவில்லை. இதனை அகற்ற வேண்டும். மற்றும் பொது இடங்களில் காணப்படும் சீமை கருவேல் மற்றும் வனத்துறை மூலம் நடப்பட்ட தைல மரங்களை முழுவதுமாக அப்புறப்படுத்த வேண்டும். பொது இடங்களில் மக்களுக்கு பயன்படும் தீவன மரங்கள் போன்ற பயன் தரும் மரங்களை மக்களுடன் பேசி நடவு செய்ய வேண்டும்.
3. மாநில அளவில் மேய்ச்சல் நிலங்களை பிற பயன்பாட்டிற்கு மாற்றுவதை நிறுத்துவதற்கு மாநில மேய்ச்சல் கொள்கை உருவாக்கி கிடைக்காரர்கள் மற்றும் மேய்ச்சல்நில வாரியம் ஒன்று ஏற்படுத்த வேண்டும்.
4. கிடை அமர்த்தி இயற்கை உரம் வழங்கும் முறையினை அரசு திட்டங்களில் சேர்த்து விவசாயிகளுக்கும் கிடைக்காரர்களுக்கும் உதவி செய்ய வேண்டும்.

## முருகனின் இயற்கை வாழை சாகுபடி



தேனி மாவட்டம் சின்னமனூர்பகுதி எரசக்க நாயக்கனூர் கிராமத்தில் கடந்த 5 ஆண்டுகளாக திரு. முருகன் வாழையை இயற்கை முறையில் பயிர் செய்து வருகிறார். இவர் வக்கீலுக்கு படித்து சிறிது காலம் பணியாற்றிவிட்டு தற்சமயம் முழு நேரமாக விவசாயாகி விட்டார். தேனிமாவட்ட மலைமாடுகள் வளர்க்கும் கிடைக்காரர்களின் சங்கத்திற்கு பொருளாளராகவும் உள்ளார். இப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகின்றது. குறிப்பாக செவ்வாழை, நாளிபூவன், ஜீ.1 போன்ற ரகங்கள் பயிரிடப்படுகின்றன. இப்பகுதியில் வாழையில் காஞ்சாரை என்ற சிக்கடோக்கா என்ற இலைப்புள்ளி நோய், பனாமா வில்ட் என்ற தண்டுபிளக்கும் நோய், தண்டு துளைக்கும் கூன் வண்டு போன்ற பிரச்சனை இருந்தாலும் முருகன் இயற்கை முறைகளையே கடைபிடித்து தீர்வு காண்கிறார். இவர் விளைவிக்கும் செவ்வாழை நல்ல ருசியாக இருக்கும். மற்ற பழங்களை விட கூடுதலாக 3–4 நாட்கள் வாடி அழுகாமல் இருக்கும் என கூறுகிறார். குலைதள்ளும் சமயம் பஞ்சகவ்யா தெளித்தால் வாழைத்தாரின் எடை கூடுதலாக இருக்கும்.

இவர் நிலத்தை நன்கு உழுதபின் ஊட்டமேற்றிய தொழு உரம் தயார் செய்து நிலத்தில் அடியுரமாகத் தருகிறார். செவ்வாழையை 8X8 அடி இடைவெளியிலும் நாளிபூவனை 6X6 அடி இடைவெளியிலும் நடுகிறார். சொட்டு நீர் பாசனம் மூலம் ஜீவாமிருதம் உரமாக கலந்து விடுகிறார்.

உயிர் உரம் கொண்டு ஊட்டமேற்றிய தொழுஉரம் அளித்தல்: ஊட்டமேற்றிய தொழுஉரம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ இட வேண்டும். ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க மக்கிய தொழுஉரம் 100 கிலோவில் சூடோமோனஸ், பாஸ்போ பேக்டீரியம், அசோஸ்பைரில்லம் தலா 2 கிலோ வீதம் கலந்து வைக்க வேண்டும். இந்த கலவையில் 10 லிட்டர் நீரில் ஒரு கிலோ சர்க்கரை கலந்த கரைசல் தெளிக்க வேண்டும். இதனை ஒரு வாரம் வரை வைத்து பெருக்கி பின்னர் வாழைக்கு உரமாக இடலாம். இதனை வாழைக்கன்றுகளுக்கு சுமார் 1/2 கிலோ வீதம் நட்ட 15 நாட்கள் கழித்து, 3 வது மாதம், 6 வது மாதம், 9 வது மாதம் தூரில் இட வேண்டும். வாழைக்கு காஞ்சாரை இலைபுள்ளி நோய் வந்தால் பஞ்சகவ்யாவுடன் சூடோமோனஸ் விரிடிஸ் டேங்கிற்கு 100 கிராம் சேர்த்து தெளித்தால் பயிருக்கு நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். கருப்பு கூண்வண்டு வந்தால் வெர்டிசிலியம் கலந்து தெளிக்கிறார். அமிர்தக்கரைசலுடன் பாஸ்போபேக்டீரியம், அசோஸ்பைரில்லம் ஏக்கருக்கு 2 கிலோ வீதம் கலந்து நீர்ப்பாசனம் செய்யலாம்.

வாழை பூக்கும் சமயம் பஞ்சகவ்யா, ஜீவாமிருதம் 15 நாள் இடைவெளியில் 10 லிட்டர் நீருக்கு 1/2 லிட்டர் கலந்து தெளிப்பதால் தார் எடை கூடும் என கூறுகிறார். ஒரு தாரின் எடை சுமார் 20 கிலோ இருக்கும். இதனை வியாபாரிகள் ஒரு கிலோக்கு ரூ. 45 செலுத்தி வாங்கி செல்கின்றனர்.

வாழையை நன்கு பராமரித்தால் விரைவில் தார் போடும். கெட்டிகாரன் வாழை எட்டாவது மாதம் என்பது பழமொழி. வாழையை 3 முறை மறுதாம்பு விட்டு சாகுபடி செய்கிறார்.

கே. முருகன், எரசக்கநாயக்கனூர்,
சின்னமனூர், தேனி மாவட்டம், செல்: 9943416501

## இந்திரகாந்திக்கு வேளாண்மை விருது

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் அருகே உள்ள அயன்சிங்கபட்டி கிராமத்தில் திருமதி. இந்திரகாந்தி கடந்த 10 ஆண்டுகளாக இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். பிற விவசாயிகளுக்கு பஞ்சகவ்யா, மீன்அமினோ அமிலம், பூச்சி விரட்டி தயார் செய்து விநியோகித்து வருகிறார். இவர் 25 மகளிர் சுய குழு உறுப்பினர்கள், 500 விவசாயிகளுக்கு பல வகையான காய்கறி செடிகள், பழமரங்கள் கொடுத்து சுமார் 10 சென்ட் நிலத்தில் வீட்டுக்கு தேவையான உணவு பொருட்களை உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார். இவருக்கு வரும் அக்டோபர் 2 தேதி தானம் அறக்கட்டளை மூலம் சிறந்த வேளாண் பெண்மணி விருது கொடுக்கப்பட உள்ளது. வாழ்த்துக்கள்

செல் : 7598551972

## மாடுகளுக்கு சூடு போடுதல்

தேனி மாவட்டத்தில் எரசக்க நாயக்கனூர் கிராமத்தில் திரு. முருகேசன் (வயது 60) வசித்து வருகிறார். இவருடைய குடும்பத்தில் பல தலைமுறைகளாக மலைமாடு வளர்க்கப்பட்டு வருகிறது. இவரிடம் 45 கிடைமாடுகள் உள்ளன.



பால் 1 லிட்டர் வரை சுரக்கும். விவசாயிகளுக்கு வயலுக்கு கிடை போடுவதன் மூலம் வருமானம் கிடைக்கின்றது. ஒரு நாளைக்கு ரூ. 500 வரை கிடை போடுவதன் மூலம் வருமானம் கிடைக்கும். ஓர் ஏக்கர் நிலத்திற்கு 20 நாட்கள் வரை கிடை அமர்த்த வேண்டும். வெயில் காலத்தில் உஷ்ணத்தினால் மாடுகளுக்கு சந்து பகுதிகளில் கழலை உண்டாகும். இந்த கட்டிகள் குணமாகிவிட்டால் பிரச்சனையில்லை. கட்டிகள் குணமாகாமல் உள்வாங்கி விட்டால் மாடுகள் தவழ்ந்து நடக்கும். இது தவளை நோய் அறிகுறியாகும். குழம்பு நீண்டு காணப்படும். இதற்கு இரும்பு கம்பியை எருவரட்டி வைத்து எரித்து வரும் நெருப்பில் பழுக்க காய்ச்சி மாடுகளுக்கு குழம்பின் மேல் பகுதி, முழங்கால் மேல் சந்து பகுதிகளில் அதாவது ஒரு காலில் 4 இடங்களில் சூடு போட வேண்டும். இதனால் இந்த நோய் குணமாகிறது.

முருகேசன்
எரசக்க நாயக்கனூர்
சின்னமன்னூர் வழி, தேனி மாவட்டம்
செல் : 9047266938

## பேட்டரி தெளிப்பானில் செலவையும் நேரத்தையும் மிச்சப்படுத்தும் புதிய கண்டுபிடிப்பு



இரண்டு சக்கர இ–பேட்டரி வாகனத்தில் பயன்படுத்தப்படும் லித்தியம் பேட்டரியை புதிய அசம்பளிங் செய்து தெளிப்பானுக்கு பயன்படுத்தும் முறையை திரு அன்பரசு உருவாக்கி உள்ளார். இவர் ஐடிஐ எலெக்டிரிக்கல் படித்து விட்டு எலெக்டிரிக் மெக்கானிக்களாக பணியாற்றி வருகிறார். இவர் புதிய லித்தியம் பொரோ பாஸ்பேட் பேட்டரி அசம்பளிங் செய்து 50 விவசாயிகளுக்கு கொடுத்துள்ளார். இதனை தண்ணீரில் போட்டாலும் சார்ட் சர்க்யூட் பாதுகாப்பு உள்ளது. ஒல்ட்டேஜ் குறைவது, கூடுவது இருந்தாலும் சீராக எடுத்து கொடுக்கும். இந்த பேட்டரியில் 8 செல்கள் இருப்பதால் 13.5 ஒல்ட்டேஜ் வரை கிடைக்கும். இதனுடைய திறன் 12 ஒல்ட்டேஜ், 12 ஆம்பியர். இதன் விலை ரூ. 3000. 15 ஆம்பியர் இதன் விலை ரூ. 3500. பேட்டரி மேலாண்மை அதாவது மாதத்திற்கு 3–4 முறை சார்ஜ் செய்து தீரும் வரை பயன்படுத்தி வந்தால் 8 வருடம் ஆயுள் காலமாகும்.

இந்த பேட்டரி மூலம் சார்ஜ் குறைவது இல்லை. ஒரு நாளைக்கு சார்ஜ் போட்டால் 6 மாதங்கள் வரை பயன்படுத்தலாம். மருந்து தெளிக்கும் சமயம் இதன் எடை (11/2 கிலோ)குறைவாக இருக்கும். இதை பயன்படுத்தி ஒரு நாளைக்கு 25 கேன்கள் வரைக்கும் தெளிக்கலாம். அனைவரும் எளிதில் கையாளலாம். இது விவசாயிகளுக்கு என்ன பயன் என்றால் அதிக நேரம் மருந்து தெளிக்கலாம். இதன் உள்ளே பிஎம்எஸ் பொருத்தி இருப்பதால் இந்த பேட்டரியை தெரு கடை, வீடுகளில் மின்சாரம் இல்லையென்றால் பயன்படுத்தலாம். இந்த பேட்டரியை 2–3 வருடம் வரை வாரண்டி கொடுக்கலாம். இதில் ஆசிட் ஊற்ற

தேவையில்லை. பிளம்ஸ் போட்டு இருப்பதால் பவர் போகாது. ஒரே நாளில் வேலை முடிகிறது, கூலி ஆள் மிச்சப்படுகிறது. வேகமாக லோடு எடுக்கும் சமயம் மட்டும் தான் பவர் உடனே கட்டாயிவிடும்.

ஆர். அன்பரசு
த/பெ. ஏ.பி. ரோஸ்ரெட்டி
செல்லாத்தூர் கிராமம்,
ஆர்.கே. பேட்டை அஞ்சல்
திருவள்ளூர் மாவட்டம் –631303
செல் : 8825774472

## இயற்கை மரவள்ளிகிழங்கு சாகுபடி

பட்டம் : ஆடிப்பட்டம், தைப்பட்டம்

அடிஉரம் : தொழுஉரம் 8 லோடு போட வேண்டும்.

இடைவெளி :

விதைகரணை பொதுவாக 3x3 அடி இடைவெளியில் நட வேண்டும். திருவனந்தபுரம் ரகத்திற்கு 31/2 x4 அல்லது 4x4 அடி இடைவெளியில் நட வேண்டும்.

பார் கட்டி விதை கரணை ஊன்றிய 40 நாளில் நான்கு முதல் ஐந்து இலைகள் தளைத்து வரும்.

**பயிர் பாதுகாப்பு**

நடவு செய்த 30 நாளில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 55 வது நாளில் மீன் அமிலக் கரைசல் 2 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும். 80 வது நாளில் பிண்ணாக்கு கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 105 வது நாளில் அமிர்த கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 130 வது நாளில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 155 வது நாளில் மீன் அமிலக் கரைசல் 2 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும். 180 வது நாளில் பிண்ணாக்கு கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 205 வது நாளில் அமிர்த கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். எட்டு மாதத்திற்கு பிறகு நீர் பாசனம் மட்டுமே போதுமானது.

**விளைச்சல்**

ஒரு ஏக்கருக்கு 18–20 குவிண்டால் மகசூல் பெறலாம். மரவள்ளிக்கிழங்கினை நேரடியாக சந்தையில் விற்பதனை விட மதிப்பு கூட்டிய மரவள்ளிகிழங்கு உணவு வகைகளின் மூலம் அதிக லாபத்தினை விவசாயிகள் பெறலாம். மரவள்ளிகிழங்கு மாவு கொண்டு முறுக்கு, பாயாசம், மெதுவடை தயார் செய்து அதிக லாபத்தை பெறலாம்.

செல்லமுத்து, கருக்கம்பாளையம்: தனராஜ், பெரியப்புகாடு, கல்குறிச்சி, நாமக்கல் மாவட்டம்

## இயற்கை நெல் சாகுபடி

**பட்டம் :** நவரை– டிசம்பர் –ஜனவரி , சொர்ணவாரி – ஏப்ரல் – மே, கார்– மே – ஜூன், குறுவை ஜூன் – ஜூலை, முன்சம்பா ஜூலை – ஆகஸ்ட், சம்பா – ஆகஸ்ட், தாளடி – செப்டம்பர் – அக்டோபர், பின் தாளடி – அக்டோபர் – நவம்பர் .

**உழவு**

நிலத்தில் உழவு செய்த பின் ஓர் ஏக்கர் நிலத்திற்கு 20 கிலோ கிராம் சனப்புபயிறு மற்றும் தக்கை பூண்டு 20 கிலோ கிராம் விதையை நிலத்தில் விதைத்து 45 நாட்களுக்கு பிறகு மடக்கி உழுதல் வேண்டும். பின்னர் வேப்பம் பிண்ணாக்கு 100 கிலோ கிராம், கடலைப் பிண்ணாக்கு 25 கிலோகிராம் கொட்ட முத்து பிண்ணாக்கு 50 கிலோ கிராம் ஆகியவற்றை சேர்த்து அடிஉரமாக இட வேண்டும். அல்லது 3 டிராக்டர் லோடு குப்பையை அடி உரமாக இடலாம்.

**மேல்உரம்**

நெல் பயிரிட்ட 15 வது நாளில் மீன் அமிலம் 1 ஏக்கருக்கு 3 லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பாய்ச்சவும். பயிரிட்ட 30 வது நாள், 30 லிட்டர் ஜீவாமிருதத்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். 60 வது நாள் 20 லிட்டர் பிண்ணாக்கு கரைசலை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

**விதைப்பு**

நாற்றங்காலில் தயார் செய்து நடுவதாக இருந்தால் 3 கிலோ விதை போதுமானது. நாற்றங்காலில் உசிலைஇலை, எருக்கு இலை, வேப்ப இலை, வாதநாராயணன் இலை, உன்னி இலைகளை இட்டு மக்கிய பின் முளைகட்டிய நெல் விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த 20 25 நாட்களில் பிடுங்கி 1 x 1 அடி இடைவெளியில் நடவு செய்யவேண்டும். நேரடியாக விதைப்பதாக இருந்தால் ஓர் ஏக்கருக்கு 8–10 கிலோ விதைநெல் தேவை.

**களையெடுத்தல்**

பயிரிட்ட 15 வது நாள் மற்றும் 30 வது நாள் ஆட்கள் வைத்து களையெடுத்தல் வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**

பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளாக கீழ்க்கண்ட முறைகளை மேற்கொள்ளவும். பயிர் செய்த 15 வது நாளில் பூச்சி விரட்டி அடிக்கவும். 25 வது நாளில் பஞ்சகவ்யா (2 லிட்டர் பஞ்சகவ்யா டாங்கிற்கு 200 மி.லி.வீதம் 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்). 40 வது நாளில் இஞ்சி பூண்டு கரைசலை (500 மி.லிட்டர் கரைசலை 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்). 60 வது நாளில் பஞ்சகவ்யா மற்றும் பூச்சி விரட்டி சேர்த்து தெளிக்க வேண்டும். (2 லிட்டர் பஞ்சகவ்யா மற்றும் 5 லிட்டர் பூச்சி விரட்டி). பூச்சி நோய் இருந்தால் வேப்ப எண்ணெய் கரைசலை நிலத்தில் தெளிக்க வேண்டும்.

**அறுவடை**

மேற்கண்ட முறைகளை தவறாமல் பின்பற்றி 150–180 வது நாளில் அறுவடை மேற்கொள்ளலாம்.

**விளைச்சல்**

பொன்னி, தூயமல்லி ஆகிய நெல் வகைகளுக்கு 25–30 மூட்டை விளைச்சல் கிடைக்கும். கருப்பு கவுனி வகைக்கு 30 மூட்டை விளைச்சல் கிடைக்கும். கருடன் சம்பா – 28 மூட்டை / ஏக்கர், டிஎன்ஏயூ– 50 மூட்டை / ஏக்கர், கருப்பு கவுணி – 21 மூட்டை , 24 மூட்டை, (ஒரு மூட்டை 75 கிலோ).

## இயற்கை மக்காச்சோள சாகுபடி

பட்டம் : ஆடி, புரட்டாசி, தைப்பட்டம்

உழவு, அடிஉரம் : நிலத்தை 5–6 முறை நன்றாக உழ வேண்டும்.ஏக்கருக்கு 10 வண்டி தொழுவுரம் பரப்ப வேண்டும்.

**விதைப்பு**

ஒரு ஏக்கருக்கு 3 கிலோகிராம் விதை விதைக்க வேண்டும். செடிக்கு செடி 10 செ.மீ. இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்.

**மேலுரம்**

விதைத்த ஒரு மாதத்தில் மேலுரமாக கனஜீவாமிர்தம் ஓர் ஏக்கருக்கு 100 கிலோ இட வேண்டும். இதனை அடியுரமாகவும் விதைக்கு முன்னரும் 100 கிலோ இடலாம்.

**களையெடுப்பு**

10 நாட்களுக்கு ஒரு முறை களையெடுப்பு செய்ய வேண்டும்.

**பயிர்பாதுகாப்பு**

மானாவரி நிலத்தில் முதலில் நிலத்தை உழுது மக்காச்சோளம் விதைத்த பின் முளைத்து வரும் இளம் பயிர்களை முயல் கடிக்கும். இதற்கு முளைத்த 15 நாட்களில் மீன் அமிலோ அமிலம் தயார் செய்து தெளிக்க வேண்டும். (100 மி.லி. கரைசலை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்). இதில் படைப்புழு 15 நாட்களில் வந்து விடும். அதை தவிர்க்க பூச்சிவிரட்டி 10 நாள் இடைவெளியில் 4 முதல் 5 முறை அடிக்க வேண்டும். மானாவாரி நிலத்தில், மழை பெய்த ஈரத்தில் 30 லிட்டர் ஜீவாமிருதம் தெளிக்க வேண்டும். இதனால் படைப்புழுவை கட்டுப்படுதலாம்.

**அறுவடை**

120–125 வது நாள் மக்காச்சோளம் அறுவடைக்கு வந்துவிடும்.

**விளைச்சல்**

ஒரு ஏக்கருக்கு 25–35 மூட்டை அறுவடை செய்யலாம். (1 மூட்டை 100 கிலோ).

## இயற்கை கரும்பு சாகுபடி

பட்டம்: கார்த்திகை பட்டம்.

உழவு: நிலத்தை மூன்று முறை உழவு செய்ய வேண்டும்.

**அடி உரம் :** மக்கிய எரு /தொழு உரம் ஏழு டிராக்டர் இட வேண்டும் (10 டன்). பின் வேப்பம் பிண்ணாக்கு 100 கிலோ இட வேண்டும். பார் கட்டுதல் நான்கு அடி அகலம் மற்றும் நீளம் நிலத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம்.

**விதைப்பு:** ஒரு ஹெக்டேருக்கு 75 ஆயிரம் கரணைகள் தேவைப்படும். ஒரு ஏக்கருக்கு 30,000 கரணைகள் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த பின் நீர் பாய்ச்ச வேண்டும்.

இடைவெளி: வரிசைக்கு வரிசை 6 அடி மற்றும் கரணைக்கு கரணை இரண்டு அடி விடவும்.

**களை எடுத்தல்:** நடவு செய்த 15, 30, 45 மற்றும் 60 நாள் இடைவெளியில் களை எடுக்க வேண்டும்.

**பசுந்தாள் உரம்:** கரும்பு கரணை நடவு செய்த ஒரு வாரத்திற்கு பிறகு சனப்பை அல்லது டயன்சா பசுந்தாள் உரம் ஏக்கருக்கு 25 கிலோ விதைகளை,

கரணைவரிசைக்கு இடையில் விதைக்க வேண்டும். 45 நாட்கள் பின்பு நன்கு வளர்ந்த சனப்பை அல்லது டயன்சாவை வெட்டி மண்ணில் புதைக்க வேண்டும்.

**பயிர் பாதுகாப்பு:** நடவு செய்து 15 வது நாள் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 30–வது நாளில் மீன் அமிலம் 2 லிட்டர் 200 லிட்டரில் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும்.

45 வது நாளில் பிண்ணாக்கு கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 60வது நாளில் அமிர்த கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 75 ஆவது நாளில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும்.

90 வது நாளில் மீன் அமிலம் 3 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பயிருக்கு தெளிக்க வேண்டும். 105ஆவது நாளில் பிண்ணாக்கு கரைசல் 50 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 120 வது நாளில் அமிர்த கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 135 வது நாளில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 150 ஆவது நாளில் மீன் அமில கரைசல் மூன்று லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும். 165 வது நாளில் பிண்ணாக்கு கரைசல் 50 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 180 வது நாளில் அமிர்த கரைசல் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 195 வது நாளில் ஜீவாமிர்தம் 30 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 210 வது நாளில் மீன் அமில கரைசல் 3 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்க வேண்டும். 225 வது நாளில் பிண்ணாக்கு கரைசல் 50 லிட்டரை 200 லிட்டரை நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். 240 வது நாளில் அமிர்த கரைசல் 30 லிட்டர் 200 லிட்டரை நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும்.


**நீர் மேலாண்மை:** மூன்று நாட்களுக்கு ஒரு முறை இரண்டு மணி நேரம் நீர் பாய்ச்ச வேண்டும்.

**தோகை உரித்தல்:**

நடவு செய்து 150ஆவது நாள் முதல் முறையாக மற்றும் 180 வது நாளில் இரண்டாவது முறையாகவும் தோகை உரிக்க வேண்டும். உரித்த தோகையை நிலத்தில் இட்டு மூடாக்கு போட வேண்டும்.

**அறுவடை:** 8 முதல் 10 மாதங்களில் அறுவடை செய்ய வேண்டும். விளைச்சல்: ஒரு ஏக்கருக்கு 80–90 டன். செல்லமுத்து, கருக்கம்பாளையம்; அந்தோனிசாமி, புளியங்குடி

## இயற்கை கறிவேப்பிலை சாகுபடி



நாம் இடும் கால்நடைக்கழிவோ அல்லது தாவர கழிவோ, இவை மண்ணில் உள்ள நுண் உயிர்களுக்கு உணவாகிறது. நுண் உயிர்களும் மற்ற உயிரிகளும் இவற்றை சிதைப்பதன் மூலம் உருவாகும் கழிவே நாம் சாகுபடி செய்யும் பயிரின் வேர் மண்டலம் சத்துக்களாக உறிஞ்சிக்கொள்கின்றன. எனவே நாம் பயிர்களுக்கும் உணவு இடுவதே இல்லை.

நிலத்தில் வாழும் நுண் உயிர்களுக்குத்தான் உணவிடுகிறோம். கறிவேப்பிலை சாகுபடி பொருத்த அளவில் இது பல ஆண்டுகள் தொடர்ச்சியாக வளரக் கூடிய பயிராகும். ஆக இதற்கு ஆண்டிற்கு ஒரு முறை தொழு உரம் 15 டன் அல்லது கம்போஸ்ட் 12 டன் அல்லது கோழி எரு 8 டன் இட வேண்டும்.

இதனை நுண்ணுயிர்கள் சிதைத்து பல்வேறு சத்துக்களை உருவாக்குகின்றன. இதில் பாதி அளவு தழைச்சத்தும், கால்பாகம் மணிச்சத்தும், பாதி அளவு சாம்பல் சத்தும் மற்ற அனைத்து நுண்ணூட்ட சத்துக்கள் பயிர் வளர்ச்சிக்கு தேவையான அளவு மட்டுமே வேர்கள் மூலம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மீதச் சத்துக்கள் பூமியில் கரிமச் சத்து உருவில் சேமித்து வைக்கப்படுகிறது. ஆக தொடச்சியாக முதல் 3 வருடங்கள் முதல் 5 வருடங்களுக்கு மேற்படி கால்நடைக் கழிவுகளை அதிக அளவில் பயன்படுத்துவதன் மூலம் நிலத்தில் கரிமச்சத்தின் அளவினை கூடுதலாக சேமிக்க இயலும். இதன்

மூலம் நில வளம் கூடும். அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் கால்நடைக் கழிவை பயன்படுத்தும் அளவை அவரவர் அனுபவ ரீதியில் படிப்படியாக குறைத்து, துவக்கத்தில் எந்த அளவு நாம் கால்நடைக் கழிவை இடத் துவங்கினோமோ அதில் பாதி அளவு பயன்படுத்தினால் போதும் என்ற நிலையை அடைய முடியும். கறிவேப்பிலை சாகுபடியில் ஆண்டு முழுவதும் சீரான விலை கிடைப்பதில்லை. விலை ஏற்ற இறக்கங்கள் தவிர்க்க இயலாதது. இத்துடன் வாழ்ந்தே ஆக வேண்டும். விலை குறைவாக, நமக்கு கட்டுபடியாகாத நிலவரம் உள்ள சந்தர்ப்பங்களில் கறிவேப்பிலையை விற்பனை செய்வதை தவிர்த்து அதனை அறுவடை செய்து நிலத்திற்கே மூடாக்காக பயன்படுத்தலாம்.

சுமார் 4 அடி உயரம் வளர்ந்த இலை கிளைகளை வெட்டி நிலத்திற்கே இடுவதன் மூலம் ஒரு ஏக்கருக்கு 8 முதல் 12 டன் அளவிற்கு தாவர கழிவாக நிலத்தில் சேர்க்கிறோம். இதன் மூலம் நிலத்தில் உயிர்மக் கழிவின் அளவு கூடும். நில வளமும் கூடும். நாம் பயன்படுத்தும் கால்நடைக் கழிவின் அளவை நில வளம் கூடும் தன்மைக்கு ஏற்ப படிப்படியாக குறைக்க இயலும். இதனை திரு. தபோல்கர் அவர்கள் நிலத்திற்கான ஆதாரங்களை அங்கேயே உருவாக்குதல் என்கிறார். பன்மடங்கு மதிப்புள்ள தாவரக் கழிவு நிலத்தில் சேர்க்கப்படுகிறது என்கிறார். அது மட்டுமல்லாது மூடாக்கு களைகளை வளரவிடாமல் கட்டுப்படுத்துகிறது. இதன் மூலம் களை வெட்டும் செலவு குறைகிறது. கறிவேப்பிலை குச்சி நிலத்தில் மக்க சிறிது காலம் அதிகம் எடுக்கும். இந்த குச்சியின் சிறப்பு என்னவெனில் இதில் கரிமச் சத்தின் அளவு மிகக் கூடுதலாக உள்ளது. ஆக நிலத்தின் கரிமச்சத்தின் அளவைக் கூடுதலாக்க இது மிகவும் பயன்படும்.

**ஊட்டக் கரைசல்கள்**

பயிர்களின் ஊட்டக் குறைவைச் சரிசெய்ய, அதாவது இராசாயன உரத்திற்கு இணையாக கொடுக்கும் கரைசல்களை ஊட்டக் கரைசல்கள் என்கிறோம். இவை செடிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்தை வழங்குகின்றன.

**தொல்லுயிர்க் கரைசல்**

தயாரிக்கத் தேவையான பொருட்கள்:

50 லிட்டர் திருகு மூடியுள்ள பிளாஸ்டிக் டிரம் 1 எண்ணம், சாணம் 5 கிலோ, வெல்லம் 500 கிராம், கடுக்காய் பொடி 25 கிராம், அதிமதுரப்பொடி 2.5 கிராம், பப்பாளி பழம் 3 கிலோ, தண்ணீர் 50 லிட்டர்.

தயாரிப்பு முறை:

மாட்டு சாணத்தை தண்ணீரில் கரைத்து டிரம்மில் ஊற்ற வேண்டும். வெல்லம், கடுக்காய் பொடி, அதிமதுரப் பொடி மூன்றையும் நீரில் கரைத்து டிரம்மில் ஊற்ற வேண்டும். பப்பாளி பழத்தில் மேல் தோலை சீவி அகற்றிவிட்டு, அரைத்துக் கூழாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் டிரம்மில் மீதமுள்ள பகுதியிலும் நீர் ஊற்றி முழுமையாக நிரப்பவும். திருகு மூடி கொண்டு டிரம்மை இருக்கமாக மூடி 10 நாட்கள் நொதிக்க விடவும்.

முதல் நாள் அல்லது 2 ஆம் நாள், டிரம்மில் மீத்தேன் வாயு உற்பத்தியாகி டிரம் சற்று உப்பிய நிலையில் இருக்கும். இந்த நிலையில் திருகு மூடியை சற்று திறப்பதன் மூலம், மீத்தேன் வாயு சீராக கசிந்து வெளியேற வாய்ப்பு உண்டாகும். இத்தகைய நிலையில் மீதம் நாட்கள் விட்டு வைக்கவும். வாயு கசிந்து கொண்டே இருக்கும். பத்து நாட்கள் கழித்து தொல்லுயிரி தயாராகி விடும். இதனை 10 லிட்டர் எடுத்து 100 லிட்டர் நீரில் கலந்து பயிருக்கு தெளிக்கலாம். அல்லது வாய்க்கால் நீரில் கலந்து விடலாம்.

**இ.எம். (EM) 2 தயாரிக்கும் முறை**

தேவையான பொருட்கள்:

இஎம் தாய்க்கரைசல் 1 லிட்டர், நாட்டுச் சர்க்கரை 2 கிலோ, தண்ணீர் 20 லிட்டர், 1 லிட்டர் பிளாஸ்டிக் பாட்டில் 22 எண்ணிக்கை.

தயாரிப்பு முறை:

பட்டியல் எண் தாய்க்கரைசல், நாட்டுச்சர்க்கரை, தண்ணீர் ஆகியவற்றை மேற்கண்ட அளவில் கலந்து 22 பிளாஸ்டிக் பாட்டில்களில் நிரப்பி திருகு மூடி கொண்டு இறுக்கமாக மூடி 10 நாட்கள் நொதிக்க விடவும். கரைசல் தயாரித்த 2 ம் நாள் பாட்டிலில் மீத்தேன் வாயு உற்பத்தியாகி இருக்கும். பாட்டிலின் திருகு மூடியை லேசாக திறப்பதன் மூலம் வாயு கசிந்து

வெளியேறும். பின்னர் தொடர்ச்சியாக வாயு கசிந்து வெளியேறிக் கொண்டே இருக்கும்.

குறிப்பு : பண்ணையில் குளிர்ந்த, இருட்டான இடத்தில் இஎம் 2 வைத்திருந்து பயன்படுத்தவும். ஒவ்வொரு பாட்டிலிலுள்ள கரைசளை 100 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

**பழக்காடி தயாரிப்பு**

தேவையான பொருட்கள்

100 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் டிரம், மூடியுடன் 1 , தண்ணீர் 100 லிட்டர், கெட்டுப் போன பழம் 10 கிலோ, ஆட்டு உதைப்பை 3– 5 லிட்டர், இஎம்2 1 லிட்டர்.

தயாரிப்பு முறை:

கெட்டுப்போன பழங்களை ஒரு நைலான் வலையில் கட்டி டிரம்மில் இடவும். ஆட்டுப்புழுக்கையை ஒரு நைலான் கயிற்றில் கட்டி டிரம்மில் இடவும். மேற்கூறிய மற்ற பொருட்கள் சேர்த்து தண்ணீரை நிரப்பவும். 10 நாட்கள் நொதிக்க விடவும். பின்னர் கரைசலை வடிகட்டி பயன்படுத்தலாம். இதனை ஓர் ஏக்கருக்கு பயன்படுத்தலாம்.

**அமுதக் கரைசல்**

தேவையான பொருட்கள்:

15 லிட்டர் கொள்ளளவு கொண்ட டிரம் 1 எண்ணம், சாணம் 1 கிலோ, மாட்டு சிறுநீர் 1 லிட்டர், வெல்லம் 200 கிராம், பழக்கூழ் 1 லிட்டர், தண்ணீர் 10 லிட்டர்.

தயாரிப்பு முறை : முதலில் நீர் எடுத்து அத்துடன் மாட்டுச் சாணத்தை கரைக்கவும். பின்பு மாட்டுச் சிறுநீரை ஊற்றிக் கலக்கவும். பின்பு பொடி செய்த வெல்லத்தைப் போட்டு நன்கு கலக்கவும். பின்பு பழக் கூழையும் ஊற்றி நன்கு கலக்கவும். பின்னர் மூடி வைக்கவும். ஐந்து நாள்கள் நொதிக்க விடவும். பயன்படுத்தும் பக்குவத்தில் அமுதக் கரைசல் தயாராகிவிடும்.

இதனை ஓர் ஏக்கருக்கு பயன்படுத்தலாம்.

**பஞ்சகவ்யா**

தேவையான பொருட்கள்:

25 லிட்டர் அளவுள்ள டிரம் 1 எண்ணம், பசுவின் சாணம் 5 கிலோ, பசுவின் சிறுநீர் 3 லிட்டர், பசுவின்பால் 2 லிட்டர், பசுவின் தயிர் 2 லிட்டர், பசுவின் நெய் 1/2 லிட்டர், இளநீர் 3 லிட்டர், வெல்லம் 1 கிலோ, வாழைப்பழம் (கூழாக) 10 முதல் 12 எண்ணம், பப்பாளிப்பழம் (கூழாக) 2 கிலோ, தண்ணீர் அல்லது தொல்லுயிரி 5– 10 லிட்டர்.

தயாரிப்பு முறை : சாணம், பொடி செய்த வெல்லம், இண்டையும் நன்கு பிசைந்து கலக்கவும். பின்னர் இதன் மேல் நெய் ஊற்றி மேலும் நன்கு பிசைந்து கலக்கவும். கலவை தயாராகியதும் பிளாஸ்டிக் டிரம்மில் அதனைப் போட்டு அதன் மேல் ஈரத் துணியால் போர்த்தவும். பின்னர் டிரம்மை மூடியால் மூடிவிடவும். நான்கு நாட்கள் வைத்திருக்கவும். தினமும் ஒரு முறை நன்கு பிசைந்து விடவும்.

மேற்படி நான்கு நாளில் சாணத்தில் உள்ள நுண்ணுயிர்கள் வெல்லத்தையும் நெய்யையும் தங்களுக்கு உணவாகப் பயன்படுத்தி செரித்துவிடும். இந்த நான்கு நாட்களில் நெய் முழுமையாகச் சிதைந்து நீரில் கரையக் கூடிய தன்மையை அடைந்து விடும்.

ஐந்தாம் நாள் மேற்படி பட்டியலில் கொடுத்துள்ள மற்ற பொருட்களை இத்துடன் சேர்க்கவும். வாழைப்பழம், பப்பாளிப்பழம் இரண்டையும் நன்கு அரைத்துக் கூழாக்கிப் பின்னர் இதில் கலக்கவும். டிரம்மை மூடி, மேலும் 15 நாட்கள் ஊற விடவும். தினமும் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளையும் ஒரு மூங்கில் குச்சியால் நன்கு கலக்கி விடவும். இவ்வாறு கலக்கி விடுவது நுண்ணுயிர்கள் சிறப்பாக செயல்படத் தூண்டுகோலாக அமைகிறது. இருபது நாளில் பஞ்சகவ்யா தயாராகிவிடும். ஓர் ஏக்கருக்கு 5 லிட்டர் முதல் 10 லிட்டர் பஞ்சகவ்யா பயன்படுத்தலாம். அதாவது 10 லிட்டர் நீருக்கு பஞ்சகவ்யா 500 மி.லி. வரை கலந்து தெளிக்கலாம்.

**மோர் கரைசல்கள்**

மோர் கரைசலில் மூன்று வகை உள்ளன. அவை தேமோர் கரைசல் , அரப்பு மோர் கரைசல், சிகைக்காய் மோர் கரைசல்.

**தேமோர் கரைசல்**

தேவையான பொருட்கள்:

10 லிட்டர் அளவுள்ள மூடியுடைய வாளி 1 எண்ணம், மோர் 5 லிட்டர், இளநீர் 1 லிட்டர், பப்பாளிக் கூழ் அரை லிட்டர், தேங்காய் ஒன்று முதல் 5.

தேங்காயை துருவல் செய்து அரைத்து தேங்காய் பால் தயாரித்து மேற்படி பொருட்களுடன் சேர்க்க

வேண்டும். ஒரு வாரம் மூடிய வாளியில் நொதிக்க விட வேண்டும். தேமோர் கரைசல் தயாராகி விடும்.

அரப்பு மோர் கரைசல் : மோர் 2 லிட்டர், இளநீர் 1 லிட்டர், பப்பாளிப்பழம் கூழ் அரை லிட்டர் இவற்றுடன் 100 கிராம் முதல் 200 அரப்புத்தூள் (உசிலை மர இலைப்பொடி) கலந்து விட்டால் அரப்பு மோர் கரைசல் தயாராகிவிடும்.

**சிகைக்காய் மோர் கரைசல்**

மோர் 5 லிட்டர், இளநீர் 1 லிட்டர், பப்பாளிப்பழக்கூழ் அரை லிட்டர் இவற்றுடன் 100 கிராம் முதல் 200 கிராம் சிகைக்காய் தூள் கலந்து விட்டால் சிகைக்காய் மோர் கரைசல் தயாராகிவிடும். இவை தவிர ஆவார இலை 1/2 கிலோ முதல் 1 கிலோ அல்லது செம்பருத்தி இலை 1/2 கிலோ முதல் 1 கிலோ அல்லது சோற்றுகற்றாழை 1/2 கிலோ முதல் 1 கிலோ அல்லது துளசி 1/2 கிலோ முதல் 1 கிலோ அல்லது புதினாக்கீரை 1/2 கிலோ முதல் 1 கிலோ அல்லது நொச்சி இலை 1/2 கிலோ முதல் 1 கிலோ ஆகியவற்றை இளம்தளிர் இலைகள் பயன்படுத்தலாம். இவற்றைப் பயன்படுத்தும் போது இதில் ஏதாவது ஒன்றை நன்கு அரைத்து பசையாக்கி பயன்படுத்தவும். அரைக்கும் சமயம் இளநீர் ஊற்றி அரைக்கவும்.

ஓர் ஏக்கருக்கு 5 லிட்டர் முதல் 10 லிட்டர் கரைசல் பயன்படுத்தலாம். அதாவது 10 லிட்டர் நீருக்கு கரைசல் 500 மி.லி. வரை கலந்து தெளிக்கலாம்.

**மீன் பாகு** (மீன் அமினோ அமிலம்)

தேவையான பொருட்கள்

இரண்டு லிட்டர் அளவு மூடியுள்ள பிளாஸ்டிக் டப்பா 1 எண்ணம், மீன் 1 கிலோ, வெல்லம் 1 கிலோ.

தயாரிப்பு முறை:

மீனை சிறு துண்டுகளாக வெட்டி டப்பாவில் போடவும். நன்கு பொடி செய்த வெல்லத்தை இத்துடன் சேர்த்து குச்சியால் நன்கு கலக்கி விடவும். பின்னர் மூடி விடவும். இதை 20 நாட்கள் நொதிக்க விடவும்.

பின்னர் மேற்படி கரைசலை ஒரு நைலான் வலையில் போட்டு நன்கு பிழியவும். தேன் போன்ற கரைசல் பாகு கிடைக்கும். அதனை ஒரு பாட்டிலில் சேர்த்து வைக்கவும்.

இவ்வாறு பிழிந்து பின்னர் முழுமையாக சிதையாத மீன் துண்டுகள் சுமார் 30 முதல் 40 விழுக்காடு இருக்க வாய்ப்பு உண்டு. மீன் வகைக்கு ஏற்ப சிதையும் அளவிலும் வித்தியாசம் உண்டு.

சிதையாத மீனை மீண்டும் டப்பாவில் போட்டு அதற்குச் சமமான எடை அளவில் வெல்லம் பொடி செய்து அத்துடன் சேர்த்து கைபடாமல் நன்கு கலக்கி பின்னர் மூடி மேலும் 10 நாட்கள் வைத்திருக்கவும். பின்னர் 2 வது முறை நைலான் வலையில் போட்டு பிழிந்தால் மீன் அனைத்தும் சிதைந்து மீதம் மீன் பாகு கிடைக்கும். இதனை முதலில் பிழிந்த மீன் பாகுடன் சேர்த்து வைத்துக் கொள்ளவும். கடல் மீன்கள் பயன்படுத்துவது மிக மிக சிறப்பாக இருக்கும். ஓர் ஏக்கருக்கு 1 லிட்டர் வரை பயன்படுத்தலாம்.

**முட்டை பாகு** (முட்டை அமினோ அமிலம்)

தேவையான பொருட்கள்:

2 லிட்டர் பிளாஸ்டிக் டப்பா 1 எண்ணம், முட்டை 5 எண்ணம், எலுமிச்சம் பழம் 10 முதல் 15 எண்ணம் வெல்லம் 200 கிராம். தண்ணீர் அளவு பாகு தயாரிக்க வேண்டிய அளவு .

தயாரிப்பு முறை : பிளாஸ்டிக் டப்பாவில் முட்டைகளை அடுக்க வேண்டும். எலுமிச்சையைச் சாறு பிழிந்து முட்டைகள் அனைத்தும் நன்கு மூழ்கி இருக்கும் அளவிற்கு ஊற்ற வேண்டும். டப்பாவை மூடி 10 நாட்கள் நொதிக்க விடவும். (10 நாட்களில் முட்டை மேல் ஓடு முழுமையாகக் கரைந்து விடும்). 11 ஆம் நாள் ஒரு கரண்டியால் நன்கு கலக்கவும். முட்டையின் ஓட்டினுள் உள்ள சவ்வு தவிர மற்ற அனைத்தும் நன்கு கரைந்து விடும். சவ்வு மட்டும் சிறு சிறு துகள்களாக கரைசலில் மிதக்கும்.

வெல்லத்துடன் நீர் சேர்த்து கொதிக்க வைத்து இளகிய நிலையில் வெல்லப்பாகு தயாரிக்க வேண்டும். இதன் சூடு நன்கு ஆறிய பின்னர் மேற்படி கரைசலில் உள்ள அளவிற்கு ஏற்ப சமபங்கு அளவு வெல்லப் பாகு அதனுடன் சேர்த்து நன்கு கலக்கி மூடி வைக்க வேண்டும். மொத்தம் 20 நாட்கள் கழித்து முட்டைப் பாகு தயாராகி விடும்.

மீன் பாகுக்குப் பதில் முட்டைப் பாகும் பயன்படுத்தலாம். மீன் பாகு பயன்படுத்திக் கொடுத்துள்ள அளவுப்படியே முட்டைப் பாகுக் கரைசலையும் பயிர்களுக்குத் தெளிப்பு செய்ய பயன்படுத்த வேண்டும். மீன் பாகு, முட்டைப் பாகு இரண்டையும் உதவி வளர்ச்சி ஊக்கிகள் என

அழைக்கிறோம். பயிரின் வளர்ச்சியானது பாதகமாக காலநிலைச் சூழலில் வளர்ச்சி தடைபடும். இத்தகைய சூழல்களில் ஆதார வளர்ச்சி ஊக்கிகள் அமுதகரைசல், ஆவூட்டம் மற்றும் மோர் கரைசல்களுடன் இதனை சேர்த்து பயன்படுத்த வேண்டும். ஓர் ஏக்கருக்கு 1 லிட்டர் பயன்படுத்தலாம்.

**மூலிகை பூச்சி விராட்டி ஊரல் கரைசல் தயாரிப்பு**

ஆடாதொடை அல்லது பிரண்டை, எருக்கு அல்லது ஊமத்தை, வேம்பு அல்லது துளசி, நொச்சி அல்லது சீதா மேற்படி 5 வகையிலும் வகைக்கு 2 கிலோ வீதம் மொத்தம் 10 கிலோ தழைகளை எடுத்து சிறு துண்டுகளாக நறுக்கி, பின்னர் இடித்து ஒரு டிரம்மில் இடவும். பின்னர் கீழ்க் குறிப்பிட்டுள்ள விதைகளில் ஏதாவது ஒன்றை பொடி செய்து அத்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வேம்பு விதை – 2 கிலோ, கடுக்காய் பொடி –500 கிராம், சீதா விதை – 300 கிராம், ஊமத்தைக்காய் – 20 காய்கள், தங்கரளிக்காய் 40 காய்கள், சுண்டைக்காய் 1 கிலோ, பச்சை மிளகாய் – 1/2 கிலோ, பெருங்காயம் – 200 கிராம், வில்வக்காய்கள் 10 காய்கள். மேற்படி 9 வகைகளில் ஏதாவது ஒன்றை குறிப்பிட்டுள்ள அளவு பொடி செய்து கொண்டு அத்துடன் மஞ்சள் தூள் 100 கிராம், மாட்டு சிறுநீர் 15 லிட்டர், சாணம் 1 கிலோ ஆகிய அனைத்தும் சேர்த்து நன்கு கலக்கி கரைசல் தயாரித்து டிரம்மில் உள்ள இலைகள் மீது ஊற்றி நன்கு கலக்க வேண்டும். பின்னர் 7 முதல் 15 நாட்கள் ஊற விட வேண்டும். பின்னர் இந்த கரைசலை 200 மி.லி ஐ 10 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கலாம்.

**நொதித்த மாட்டு சிறுநீர்**

தேவையான பொருட்கள்:

5 லிட்டர் பிளாஸ்டிக் டிரம் மூடியுடன், எருக்கு போரான் சத்து 5 கிலோ, முருங்கை இலை, இரும்புச் சத்து – 5 கிலோ, ஆவாரை சொம்பு சத்து – 5 கிலோ, புளிய இலை – துத்தநாகம் 5 கிலோ தண்ணீர் 40 முதல் 50 லிட்டர் இளம் 2 1 லிட்டர், நாட்டுச் சர்க்கரை 500 கிராம்.

தயாரிக்கும் முறை:

இளம் தளிர் இலைகள் சேகரம் செய்து இடித்து டிரம்மில் இடவும். பட்டியலில் உள்ள மற்ற பொருட்கள் சேர்த்து மூடி 10 நாட்கள் நொதிக்க விடவும்.

பயன்கள் :

கறிவேப்பிலையில் நுண் சத்து குறைபாடு நீக்கும்.

பயன்படுத்தும் முறை:

பாசன நீரில் ஏக்கர் ஒன்றுக்கு 10 லிட்டர் முதல் 20 லிட்டர் பழ காடியில் கலந்து பயன்படுத்த வேண்டும்.

**கரிவேப்பிலை சாகுபடியின் பாசனத்தில் மேற்படி கரைசல்கள் பயன்படுத்தும் முறை**

ஏக்கர் ஒன்றுக்கு தேவையான கரைசல்கள்:

தொல்லுயிர் கரைசல் –100 லிட்டர், பழகாடி – 100 லிட்டர்.

**ஊட்டக்கரைசல்**

பஞ்சகவ்யா – 5 லிட்டர் முதல் 10 லிட்டர், அமுத கரைசல் 10 லிட்டர் முதல் 50 லிட்டர், மோர் கரைசல்களில் ஒன்று – 5 முதல் 10 லிட்டர்.

**வேரைத் தாக்கும் பூசன நோய் கட்டுப்படுத்த**

சூடோமோனஸ் – 500 கிராம், டீ.விரிடி – 500 கிராம்.

**நூற்புழு கட்டுப்படுத்த**

பைசிலோ மைசிஸ் – 500 கிராம்.

**வேர்ப்புழு கட்டுப்படுத்த**

பவேரியா யார்ட்டி – 500 கிராம், மெட்டா ரைசம் – 500 கிராம்.

**உயிர் உரங்கள்**

அசோஸ்பைரில்லாம் – 500 கிராம் முதல் 1 கிலோ, பாஸ்போ பாக்டீரியா – 500 கிராம் முதல் 1 கிலோ, பொட்டாசிய திரட்டு பாக்டீரியா – 500 கிராம் முதல் 1 கிலோ, வேம் (வேர் உட்பூசனம்) – 500 முதல் 1 கிலோ. அனைத்தும் கலந்து ஒரு நாள் நொதிக்க வைத்து அடுத்த நாள் பாசனத்தில் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு: நாம் பயன்படுத்தும் பயோ இடு பொருட்கள் இந்தக் கலவையில் பன்மடங்கு பெருகும். சொட்டு நீர்ப் பாசனத்தில் நன்கு வடிகட்டி பயன்படுத்த வேண்டும். கறிவேப்பிலை அறுவடை என்பது 75 முதல் 90 நாட்கள் இடைவெளியில் நடைபெறுகிறது. இத்தகைய சூழலில் மேற்குறிப்பிட்ட கரைசல்கள் மேற்படி பட்டியலில் உள்ள 1 முதல் 5 முடிய உள்ளவற்றை மாதம் 2 முறை பயன்படுத்த வேண்டும். மற்ற உயிர்ம இடுபொருட்களை பட்டியலில் உள்ள 6 முதல் 14 வரை மாதம் ஒரு முறை வீதம் மாதம் இரண்டு முறை பயன்படுத்த வேண்டும்.

பனிக்காலங்களில் வளர்ச்சி பாதிப்பு உள்ள சூழல்களில் பட்டியல் 1 முதல் 5 கரைசல்களை இரு மடங்காக்கிப் பயன்படுத்தலாம்.

வேர்ப்புழு தாக்குதல் இல்லையெனில் பட்டியலில் 9.10 பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதனை அனுபவ ரீதியாக தீர்மானிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டும் நிலவளம் கூடும் சூழலில் மட்கின் அளவு கூடுதல் ஆக மேற்படி பயோ இடு பொருட்கள் பயன்பாட்டை படிப்படியாக குறைத்து விடலாம். வெளி இடுபொருட்கள் செலவு குறையும்.

**பயிர்ப் பாதுகாப்பு**

இலை வழி ஊட்டமாக, நுண் ஊட்டச் சத்துக்கள் தேவையை நிறைவு செய்வதாக, புழு பூச்சி பூசன நோய் கட்டுப்பட திட்டமிடுதல் வேண்டும். தெளிப்பில் மேற்கூறிய பயன்கள் அனைத்தும் நிறைவு செய்யும் விதத்தில் கரைசல்களை பயன்படுத்துவதும், உயிர்ம வெளி இடு பொருட்கள் பயன்படுத்துவதும் திட்டமிட வேண்டும். மாலை நேரம் 4 மணிக்கு மேல் தெளிப்பு செய்வதில் நல்ல பலன் கிடைக்கும்.

100 லிட்டர் தண்ணீரில் கரைசல்கள். உயிர்ம இடு பொருட்கள் பயன்படுத்தும் அளவு:

பஞ்சகவ்யா 3 லிட்டர், அல்லது அமுத கரைசல் 10 லிட்டர், மோர் கரைசல் 5 லிட்டர், மூலிகைப் பூச்சி விரட்டி கரைசல் 5 முதல் 10 லிட்டர், மீன்பாகு அல்லது முட்டை பாகு 100 மி.லி. முதல் 500 மி.லி. (தேவைப்பட்டால்) தொல்லுயிர் கரைசல் 10 லிட்டர் வெர்ட்டி சீலியம் லெகானி 1 கிலோ. பவேரியா பாசியன 1 கிலோ, மெட்டா ரைசம் 1 கிலோ, சூடோமோனஸ் 1 கிலோ

குறிப்பு : மாதம் 2 அல்லது 3 முறை பூச்சி நோய் தாக்குதல் அனுசரித்து வருமுன் காப்பாக தெளிப்பு செய்ய வேண்டும்.

**நுண் உயிர்க் கலவை உரம் தயாரித்தல்**

மழைக் காலங்களில் கரிவேப்பிலைக்கு வேர் சம்பந்தமான நோய்கள் ஆங்காங்கே தோன்றும். இவ்வாறு நோய் பாதிக்கப்படும் பகுதியிலிருந்து மற்ற பகுதிகளுக்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த நுண்ணுயிர்கலவை உரம் பயன்படுத்த வேண்டும்.

தயாரிப்பு முறை:

ஏக்கர் ஒன்றுக்கு 100 கிலோ முதல் 500 கிலோ வரை தேவைக்கு ஏற்ப தயாரித்து பயன்படுத்தலாம்.

1. மட்கும் எரு அல்லது மண்புழு எரு 80 கிலோ முதல் 400 கிலோ, 2. சாம்பல் அல்லது உம்மி சாம்பல் 10 கிலோ முதல் 50 கிலோ, 3. மரத்தூள் 10 கிலோ முதல் 50 கிலோ மொத்தம் 100 கிலோ முதல் 500 கிலோ.

**வேர்ப்பூசன நோய் கட்டுப்படுத்த**

4.சூடோமோனஸ் 1 கிலோ முதல் 2 கிலோ,

5. டி.விரிடி 1 கிலோ முதல் 2 கிலோ .

**நூற்புழு கட்டுப்படுத்த**

6. பைசிலோ மைசிஸ் 1 கிலோ முதல் 2 கிலோ

**வேர்ப்புழு கட்டுப்படுத்த**

7. பவேரியா பிராங்கினி யார்ட்டி 1 கிலோ முதல் 2 கிலோ, 8.மெட்டா ரைசம் 1 கிலோ முதல் 2 கிலோ.

**உயிர் உரங்கள்**

9. அசோஸ் பைரில்லம் 1 கிலோ முதல் 2 கிலோ,

10. பாஸ்போ பாக்டீரியா 1 கிலோ முதல் 2 கிலோ,

11. பொட்டாசிய திரட்டு பாக்டீரியா 1 கிலோ முதல் 2 கிலோ, 12. வேம்பு 1 கிலோ முதல் 2 கிலோ.

**ஊட்டக் கரைசல்கள்**

13. பஞ்சகவ்யா 5 லிட்டர், 14. அமுத கரைசல் 10 லிட்டர்,

15. மோர் கரைசல்களில் ஒன்று 5 லிட்டர்,

16. தொல்லுயிர்க்கரைசல் 5 கிலோ முதல் 25 கிலோ,

17. பழகாடி 5 கிலோ முதல் 25 கிலோ.

தயாரிப்பு முறை :

மேலே கூறிய பட்டியலில் எண் 1,2,3 ஆகியவற்றை நன்கு கலக்கி தயார் செய்து குவியலாக்கவும், அதன் மீது உயிர் உரங்கள் எண் 4 முதல் 12 முடிய தயாரிப்புகள் தூவி நன்கு சிராக கலக்கி மீண்டும் குவியலாக்கவும். குவியலின் மேல் பகுதியில் அரை வட்ட வடிவில் குழி உருவாக்கவும். இந்த குழியினுள், கரைசல்கள் எண் 13 முதல் 17 வரை கரைசல்களை ஊற்றவும். ஓர் இரவு அப்படியே விடவும். அடுத்த நாள் காலை கரைசல்கள் அனைத்தும் கலவையுள் உறிஞ்சப்பட்டிருக்கும். இதனை நன்கு கலக்கி சீரான ஈரப்பதம் உள்ளவாறு தயாரிக்கவும். தயாரித்த நாளே பயன்படுத்தலாம். மேலும் 30 நாட்கள் வரை வைத்திருந்தும் பயன்படுத்தலாம்.

நுண்ணுயிர்க் கலவை உரத்தை அதிக நாட்கள் வைத்திருக்கும் போது அதில் வெப்பம் உருவாக்கக்

கூடாது. இதனைத் தவிர்க்க 2 அடி அகலம் 1 அடி உயரம், தேவையான நீளம் உள்ள குவியலாக்கி அதன் மேல் ஈரச் சாக்கு பரப்பி மூடி விடவும். ஈரப்பதம் காக்க தினமும் லேசாக நீர் தெளித்து வரவும். தேவையான போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

பட்டியலில் குறிப்பிட்ட எண் 1,2,3, பொருட்களை கூடையில் அளந்தும் பயன்படுத்தலாம். சிறு கலவையாக பிரித்துத் தயாரித்தால் வேலையை எளிதாக்க இயலும், கலவையின் தயாரிப்பு அளவு கூடுதலாக இருக்கும் போது எண் 1,2,3, ஆகியவற்றின் அளவு மட்டும் மாறுபடும். எண் 16, 17 கரைசல்களில் அளவும் அதற்கு ஏற்ப மாறுபடும்.


பயன்படுத்தும் முறை:

நோய் தாக்கிய பகுதிகளில் கறிவேப்பிலை இரு பக்கங்களிலும் 9 அங்குல ஆழம் தேவையான நீளம் வாணி உண்டாக்கி அதில் நுண்ணுயிர்க்கலவை உரம் இட்டு மண் அனைத்து விடவும். நோய் கட்டுப்படும், நோய், வேர் மண்டலம் மூலம் மற்ற பகுதிகளுக்கு பரவுவதும் தடைபடும். மீதி பகுதிகளுக்கு ஒரு பார் விட்டு ஒரு பார் நுண்ணுயிர் கலவை உரத்தை மாலை நேரம் சால் விடவும்.

திரு. சுந்தரராமன், கோம்புபள்ளம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம், செல் : 9842724778

## தென்னை சாகுபடி – புதிய நடவு முறை

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா தஞ்சாகூர் ஊரில் திரு. இந்தியா பாரதிதாசன் உருவாக்கிய புதிய நடவு முறையில் பாசன நீர் அளவை குறைக்கலாம். ஓர் ஏக்கரில் 130 மரங்கள் வரை நடலாம். கன்றுகளுக்கு நல்ல காற்றோட்டம் கிடைக்கும். கன்றுக்கு கன்று 10 அடி. வரிசைக்கு வரிசை 27 அடி.




இந்தியபாரதிதாசன், செல்: 8946052788

## இயற்கை மாமர சாகுபடி



என்னிடம் 100 மாமரங்கள் சுமார் 11/2 ஏக்கரில் சாகுபடி செய்து வருகிறேன். இதனை கடந்த 10 வருடங்களாக இயற்கை முறையில் சாகுபடி செய்து வருகிறேன். மாமரங்கள் ரகங்கள் : கல்லாமை, சப்பட்டை, போன்றன உள்ளன. ஆடி மாதத்திற்கு முன் 4 டிரக்டர் லோடு மக்கிய தொழுஉரம் பரப்பிவிடுவேன். பின்னர் உழுது விட்டால் நன்றாக மண்ணோடு சேர்ந்து விடும். இதற்கு பின் மானாவரியாக மாமரத்தற்கு ஊடு பயிராக தட்டைபயிறு, உளுந்து, நிலக்கடலை விதைத்து விடுவேன். ஊடு பயிறுக்கு தரும் உரம் மாமரத்திற்கும் உரமாகிவிடும். வருடத்திற்கு ஒரு முறை மரத்தூரில் 10 கிலோ மக்கிய கம்போஸ்ட் இட வேண்டும். கம்போஸ்ட் தயார் செய்தல் (ஓர் ஏக்கர்):

1 டிராக்டர் மாட்டு சாணம், மண்டை வெல்லம் 5 கிலோ, சாம்பல் 10 கிலோ, சுண்ணாம்பு 5 கிலோ. இவை அனைத்தையும் நன்றாகக் கலந்து சாணப்பாலால் சாந்து பூசிவிட வேண்டும். இதற்கு மழை, வெயிலிலிருந்து பாதுகாக்க தார்பாய் அல்லது தென்னை ஓலையைப் பயன்படுத்தலாம். 40 நாட்கள் கழித்து பார்த்தால் பிண்ணாக்கு தூள் போன்று கம்போஸ்ட் தயாரிகிவிடும். இதனை நிலத்தில், மரத்திற்கு அடியுரமாகப் பயன்படுத்தலாம்.

மாமரத்தில் பூ எடுக்கும் முன்னர் பஞ்சகவ்யா தயார் செய்து 10 லிட்டர் நீரில் 3/4 லிட்டர் சேர்த்து விசை தெளிப்பான் மூலம் தெளித்து விடுவேன். இதனை 15–20 நாட்கள் இடைவெளியில் இரு முறை தெளிப்பேன். இச்சமயத்தில் சாறு உறிஞ்சும் பூச்சி தென்பட்டால் மீன் அமினோஅமிலம் தயார் செய்து மாமரத்தின் இலைகள் மீது படும்படி (2 லிட்டர் ஓர் ஏக்கருக்கு) நீரில் கலந்து வேப்பிலை கொண்டு கையால் தெளித்துவிடுவேன் இதிலிருந்து வரும் வாசனைக்கு பூச்சிகள் பாதிப்பு குறையும்.

ஆ. பூசாரி, 4/80, கவராயப்பட்டி, ரெட்டியபட்டி அஞ்சல் நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்

செல் : 9159223909

## இயற்கை முறையில் கொய்யா சாகுபடி



கொய்யாவில் விவசாயத்திற்கு ஏற்ற சிறந்த ரகங்கள்: எல்.49 – வெள்ளை கொய்யா, ஆர்கா கிரண் – சிவப்பு, லலித் சிவப்பு, சிறிய பழங்கள் மற்றும் பல ரகங்கள் உள்ளன.

கொய்யா கன்றுகள் பல முறைகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. பதியம் போடுதல், ஒட்டு கட்டுதல், குச்சிகள் தேர்வு செய்து நட்டு கன்று உற்பத்தி செய்தல் மற்றும் வேறு சில முறைகளில் கன்று உற்பத்தி செய்துகின்றார்கள்.

கன்று தேர்வு செய்தல்:

பதியன் போட்டு உற்பத்தி செய்யும் கன்றுகளுக்கும் குச்சியின் மூலம் உற்பத்தி செய்யும் கன்றுகளுக்கும் ஆறு மாதங்களில் பலனுக்கு வந்துவிடும்.

நடவுமுறை:

சாதாரண நடவு முறையில் கன்றுக்கு கன்று 15 அடி இடைவெளி விட வேண்டும். அடர்நடவு முறையில் 8 அடிக்கு 1 கன்று என நடவு செய்தல் வேண்டும். அடர் நடவு செய்தால் ஆண்டுக்கு ஒரு முறை கண்டிப்பாக கவாத்து செய்தல் வேண்டும். நடவு செய்ய 1 ½ X 1 ½ X 1 ½ குழியில் முதலில் மூன்று கிலோ மக்கியத் தொழு உரம் போட்டு சிறிது மண் தள்ளி செடிகளை நடவு செய்ய வேண்டும். நிலம் நல்ல செம்மண் மற்றும் வண்டல் மண் இருப்பது நல்லது. களிமண் பூமியில் கன்றுகளின் வளர்ச்சி சரியாக இருக்காது. நல்ல வடிகால் வசதி உள்ள நிலம் ஏற்றது. தண்ணீர் பல நாட்கள் தேங்க கூடாது. கன்றுகள் நடவு செய்தால் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதிக தண்ணீர் மற்றும் அதிக ஈரப்பதம் எப்போதும் இருந்தால் வேர்ப்புழு தாக்குதல் வந்து வேர் அழுகல் ஏற்பட்டு கன்றுகள் வாடிவிடும். வேர் அழுகல் நோய் வந்த உடன் தண்ணீரை விடக்கூடாது. வேப்பம் புண்ணாக்கு ஒரு கிலோவுக்கு 10 லிட்டர் தண்ணீரில் ஒரு நாளைக்கு ஊற வைத்து வடிகட்டி மேலும் இரண்டு லிட்டர் தண்ணீர் சேர்த்து ஒரு செடிக்கு ஒரு லிட்டர் என வேர் பகுதியில் விட்டு லேசாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கொய்யாவில் பூச்சி தாக்குதலில் வெள்ளை கற்றாழை பூச்சி தான் முதலில் உள்ளது. வெயில் காலத்தில் அதிகமாக தாக்கும். கற்றாழை பூச்சி பரவல் எறும்புகளினால் தான் பரவுகின்றது. அதனால் எறும்புகளை கட்டுப்படுத்த பசுவின் சாணம் கரைசலை செடியின் தண்டு மண் சேருமிடத்தில் ஊற்ற வேண்டும். இதனால் எறும்புகள் இப்பகுதியில் கூடு கட்டாமல் வேறு இடத்திற்கு சென்று விடும். கற்றாழை பூச்சிக்கு இயற்கை பூச்சி விரட்டி அடிக்கலாம். அல்லது குளிர்ந்த ஐஸ் தண்ணீர் கொண்டு தெளிப்பான் மூலம் தெளித்தால் பூச்சி தாக்குதல் தவிர்க்கப்படும்.

ஜெகந்நாதராஜா
இராஜபாளையம் நர்சரி, 168, மதுரை ரோடு,
காட்டன் மார்க்கெட், இராஜபாளையம் – 626117
செல் : 9842122866

## கிராம அறிவு பேரேடு

22.2.2008 அன்று மதுரையில் நடைபெற்ற கிடைக்காரர்களின் பாரம்பரிய அறிவு நாட்டு கால்நடை இனங்கள் வனவளம் பாதுகாத்தல் மற்றும் பல்லுயிர் பரவல் கருத்தரங்களில் வெளியிடப்பட்ட கிராம அறிவு பேரேடு (வாடிப்பட்டி கிராமம், உத்தப்பநாயக்கனூர் பஞ்சாயத்து, மதுரை மாவட்டம்). லிருந்து பதிவு செய்யப்பட்ட உத்திகள் பின்வருமாறு:

### கிராம மக்களின் வேளாண்மை மற்றும் கால்நடை பராமரிப்பு முறைகள்

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா உத்தப்பநாயக்கனூர் வாடிப்பட்டி கிராமத்தில் சுமார் 200 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் விவசாயம் மற்றும் கால்நடை பராமரிப்பை நம்பி ஜீவனம் செய்து வருகின்றனர்.

**பாரம்பரிய விவசாய முறை**

இவ்வூரில் நாட்டு முருங்கை சுமார் 300 ஏக்கரில் பயிர் செய்யப்படுகின்றது. இது தவிர மானாவரியாக கம்பு, சோளம் பயறு சாகுபடி செய்யப்படுகிறது. முருங்கையில் வாரத்திற்கு ஒரு முறை பூச்சிக்கொல்லி மருந்து தெளிப்பர். 2 மாதத்திற்கு ஒரு முறை இரசாயன உரமிட்டு முருங்கைக்கு நீர் பாய்ச்சுகின்றனர். முருங்கைக் காய்களை வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம், சென்னைக்கு வேன்கள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

**பாரம்பரிய கால்நடை பராமரிப்பு**

இவ்வூரில் 100 குடும்பங்கள் பாரம்பரிய புலிக்குளம் மாடு வைத்து ஜீவனம் நடத்தி வருகின்றனர். ஒவ்வொருவரிடமும் சுமார் 10–300 மாடுகள் உள்ளன. இவைகளை கிடைகளாக சேர்த்து பராமரிப்பு செய்து வருகின்றனர். இவ்வூரில் சுமார் 2670 மாடுகள் உள்ளன. 10 வருடங்களுக்கு முன்னர் 5000 மாடுகள் இருந்தன. வனத்தில் மேய்க்க அனுமதி மறுக்கப்பட்டதால் மாடுகளின் எண்ணிக்கை முன்பு இருந்ததை விட பாதியளவாகக் குறைந்து விட்டது.

பாரம்பரிய புலிக்குளம் கிடைமாடுகள் வளர்ப்பு மூலம் இயற்கை எருவும், உழவு வேலைக்கு காளைகளும், விவசாயிகளுக்கு கிடைத்து வருகின்றன. இவர்கள் தங்களுடைய புலிக்குளம் மாடுகளை அருகிலுள்ள வெள்ளமலை (தங்கமலை) யில் ஒவ்வொரு வருடமும் மழை காலத்தில் புரட்டாசி முதல் தை மாதம் வரை மேய்த்து வருவார்கள். மற்ற மாதங்களில் சோழவந்தான், நிலக்கோட்டை, ஒத்தக்கடை, மேலூர் வத்திராயிருப்பு போன்ற ஊர்களுக்கு ஒட்டிச் சென்று கிடை அமர்த்தி பிழைத்து வருவார்கள். வருடத்திற்கு ஒரு முறை காளை கன்றுகளை விவசாயிகளுக்கு உழவு ஓட்ட, ஜல்லிக்கட்டுக்கு கன்று ஒன்றுக்கு சுமார் ரூ. 3000 பெற்றுக் கொண்டு விற்று வருமானம் சேர்ப்பார்கள். ஒவ்வொரு கிடையிலும் சுமார் 8 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். 1998 ம் ஆண்டு ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் தமிழ் நாடு காடு வளர்ப்பு திட்டம் (டெப்) மரக்கன்றுகள் நட்டு இவர்களது மாடுகளை மலையில் மேய்க்க அனுமதி மறுத்தனர். மரக்கன்றுகள் நட்டு 5 ஆண்டுகளுக்குப் பிறகு மேய்ச்சல் அனுமதி அளிப்பதாகக் கூறியிருந்தனர். ஆனால் 10 ஆண்டுகளாகியும் இது வரை மேய்ச்சல் அனுமதி வழங்கப்படவில்லை.

ஆதலால் கிராம மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து வனத்துறை அதிகாரியிடம் எடுத்துக் கூறியும் எந்த வித முன்னேற்றமும் இல்லை.

**மழை பொழிய மலையில் கோமியம் தெளித்து சாமிக்கு விழா எடுத்தல்**

ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் சனிக்கிழமை மலைக்கு சென்று கொத்தங்கோமியம் தெளிப்பார்கள். பின்னர் சாம்பிராணி புகைபோட்டு கன்னிமார் தெய்வத்திற்கு படைத்து வழிபடுவார்கள். இந்த சம்பிரதாயம் முடிந்தபின் மலையிலிருந்து வீடு திரும்புவார்கள். வீட்டிற்கு வருவதற்குள் நல்ல மழை பெய்து விடும். ஆனால் இம்முறை வனத்துறை மலை மேய்ச்சலை வனத்துறையினர் தடுத்த பின்னர் முற்றிலும் நின்று விட்டது.

**கிடைக்காரர்கள் கூறும் யோசனைகள்**

மலையை 3 பகுதிகளாகப் பிரித்து (வெள்ளைமலை, கோயில்மலை, மற்றும் உள்கோம்பை மலை) சுழற்சி முறையில் ஒவ்வொரு மலையிலும் 3 வருடங்கள் மாடுகளை மேய்க்க அனுமதியளிக்க வேண்டும். நாங்கள் மலையில் மாடு மேய்க்க அனுமதிக்கப்படும் பகுதியில் உள்ள காய்ந்த விறகுகளை மட்டும் எடுத்துக்கொள்வோம். பச்சை மரங்களை வெட்ட மாட்டோம். அப்படி யாராவது வெட்டினால் நாங்களே ஊரில் அபராதம் விதித்து தண்டிப்போம். என்றும் அதைத் தவிர மற்ற மலைபகுதியை மாடு மேய்க்க, விறகு எடுக்க உபயோகிக்க மாட்டோம். எனவே ஒவ்வொரு வருடமும் புரட்டாசி முதல், தை மாதம் வரை மாடு மேய்க்க மேய்ச்சல் உரிமையை அங்கீரித்து மீண்டும் மேய்ச்சல் பாஸ் புதுப்பிக்கப்பட வேண்டும்.

2. கன்னிமார் கோயிலுக்கு செல்லும் பகுதியில் மரங்கள் நாட்டு பாதையை அடைத்துவிட்டதால், கால்நடை மேய்ச்சலுக்கு செல்வதில்லை. இதனால் புதர் முட்செடிகள் வளர்ந்து நாங்களும் கோவிலுக்குச் செல்ல முடிவதில்லை. எனவே கால்நடைகளை கன்னிமார் கோவிலுக்கு அருகே மேய்க்க அனுமதிக்க வேண்டும். இதனால் பாதைகள் சரியாகி நாங்களும் கோயிலுக்குச் செல்ல முடியும்.

3. வளையட்டி இராசானிக் கோட்டை மலையில் மலட்டார்டேம் உள்ளது. இந்த டேம் தண்ணீர். உ. வாடிப்பட்டி கிராமத்தைத் தவிர சுற்றியுள்ள 58 கிராமங்களுக்கும் பாசன வசதி தருகிறது. இந்த டேமிலிருந்து உ. வாடிப்பட்டி கிராமம் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே மாடு, ஆடு தண்ணீர் குடிக்க வசதியில்லாமல் உள்ளது. இதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டும்.

எங்களுக்கு புலிக்குளம் மாட்டை பாதுகாப்போர் என்ற அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும்.

பெண்கள் துளசி இலை, ஆவாரம் பூ போன்ற மூலிகைகளை மலையில் காய வைத்திருக்கும் சமயம் வனத்துறையினர் தீ வைத்து விடுகின்றனர். அவ்வாறு நடைபெறாமல் இருக்க பாதுகாப்புத் தர வேண்டும்.

**உத்தப்பநாயக்கனூர் பகுதியில் தொகுக்கப்பட்ட பாரம்பரிய வைத்ய முறைகள்**

**வெள்ளமலைப்பட்டி ஜெயபாலின் கால்நடை வைத்தியம்**

இளங்கன்று அசைபோடாமல் இருந்தால்:

இளங்கன்று கத்திரிகாயை அதிகம் தின்று விட்டால் பசியில்லாமல் இருக்கும். இதற்கு வெற்றிலை 25 கிராம், மிளகு 20 கிராம், ஓமம் 15 கிராம் ஆகியவற்றை 1/2 லிட்டர் நீருடன் அரைத்து கொட்டான் மூலம் காலை மாலை 2 வேளை கொடுக்க வேண்டும்.

ஆட்டு குட்டிக்கு பசியில்லாமல் இருந்தால்

ஆட்டு குட்டி அரிசியை அதிகம் தின்று விட்டால் பசியில்லாமல் இருக்கும். தேங்காய் எண்ணெய் 50 மி.லி. மாவு சோடா 15 கிராம், இவற்றை கலந்து ஒரு வேளை ஊற்ற சரியாகும்.

மாடுகளுக்கு மசால் உருண்டை:

மாடு நன்கு தீவனம் எடுக்கவும், உடல் தேறவும் கிராமங்களில் மசால் உருண்டை தயார் செய்து மாடுகளுக்கு கொடுப்பது வழக்கம்.

தேவையான பொருட்கள் : சிறுகுமட்டி வேர் 1/4 கிலோ, பெருகுமட்டி வேர் 1/4 கிலோ, சிறுமிளகு 15 கிராம், பெருமிளகு 15 கிராம், ஓமம் 15 கிராம், சித்தரத்தை 15 கிராம், இஞ்சி 20 கிராம், தேங்காய் 2 எண்ணம், கருப்பட்டி 1/2 கிலோ. வேர் மற்றும் கடைசரக்குகளை தனித்தனியே காய வைத்து இடித்து பொடி செய்து கொள்ள வேண்டும். பின் கருப்பட்டி எல்லாவற்றையும் சேர்த்து உருண்டையாக்க வேண்டும். இந்த மருந்தில் 10 உருண்டை வரும். ஒரு மாட்டிற்கு ஒரு வேளைக்கு 1 உருண்டை வீதம் 3 நாட்கள் வரை போடலாம்.

புழு வைத்த புண்ணிற்கு:

கொழுஞ்சி வேர் 100 கிராம், சுண்ணாம்பு 20 கிராம், மூக்கரண்டி வேர் 100 கிராம், ஆகியவற்றை ஒன்றாக அரைத்து புழுவைத்த புண்ணில் வைத்து பூசி விட புழு கூட்டுடன் வந்து புண் ஆறிவிடும்.

கால்காணைக்கு:

கால்காணை உள்ள இடத்தில் பினாயில் ஊற்றி கழுவி விட புழு செத்து விடும். பின் அந்துருண்டையை பொடி செய்து கால்காணை உள்ள இடத்தில் பூசி விட வேண்டும்.

திரு. ஜெயபால்
சின்னசெம்பட்டி, மலைபட்டி அஞ்சல்
உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்

**அய்யா கோனாரின் விஷக்கஷ வைத்தியம்**

உசிலம்பட்டி தாலுகா இடையப்பட்டியைச் சேர்ந்த திரு. அய்யாகோனார் (73) நாட்டுப்புற பாடல்கள் இயற்றி பாடுவதில் திறமையுடையவர். இவர் சொந்த பாடல்கள் 200 இயற்றியுள்ளார். இவர் தந்தை ஓலைச்சுவடி வைத்திய முறைகளை கையாண்டு எல்லாவித நோய்களுக்கும் வைத்தியம் பார்த்து உள்ளார். அவரிடமிருந்து எல்லா விதமான பாம்புகடி மற்றும் பூரான், சீயான்கடிக்கு மூலிகை வைத்தியம் கற்றக்கொண்டு மாடு, மனிதர்களுக்கு வைத்தியம் பார்க்கிறார்.

எல்லாவிதமான பாம்புகடி, பூரான் மற்றும் விஷபூச்சி கடிக்கு:

கீரி பச்சிலை செடி வேர் (Polycarpaea carymbosa) (பூ வெள்ளை நிறத்தில் இருக்கும்) 1/2 கிலோ எடுத்து காய விட வேண்டும். அத்துடன் 25 கிராம் மிளகு போட்டு இடித்து பொடி செய்து கொள்ள வேண்டும். இந்தப்பொடி 20 கிராம் எடுத்து சுடு தண்ணீர் விட்டு அரைத்து அத்துடன் 50 மி.லி. சுடு தண்ணீர் கலந்து காலை வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இவ்வாறு மாலை ஒரு நேரம் வீதம் 6 வேளை குடிக்க வேண்டும். தைவேளை 10 இலை, வெங்காயம் 2 எண்ணம் ஆகியவற்றை கையில் கசக்கி கண்ணில் ஊற்ற வேண்டும்.

பத்தியம் : மூன்று நாட்கள் குளிக்க கூடாது. சுடு கஞ்சி உப்பில்லாமல் அத்துடன் பாசி பருப்பு, மிளகாய் துவையல் சேர்த்து 3 நாட்கள் 3 வேளையும் சாப்பிட வேண்டும். தேவையானால் பால் 50 மி.லி. சீனிபோட்டு காலை மட்டும் குடிக்கலாம். காபி, டீ, வேறு சிற்றுண்டி எதுவும் சாப்பிடக் கூடாது. ஒரு வாரத்திற்கு கத்தரி, மீன், கருவாடு சேர்க்கக் கூடாது. குடும்பத்தில் தாம்பத்திய உறவு இருக்கக் கூடாது.

மாடு விஷக்கடிக்கு:

மாடு விஷக்கடியினால் முகம் மற்றும் உடல் வீங்கியிருக்கும். இதற்கு தைவேளை 10 கிராம், காப்புகட்டு செடிஇலை 10 கிராம், மிளகு 20 எண்ணம் ஆகியவற்றை சேர்த்து வாயில் போட்டு மென்று மூக்கனாங்கயிறு ஒருத்தர், கொம்பு ஒருத்தர், மாடு ஒருத்தர் பிடித்துக் கொண்டு கண்ணில் துப்பி விட வேண்டும். இவ்வாறு காலை, மாலை மறுநாள் காலை என 3 வேளை செய்ய வேண்டும். மீதி மருந்தை உடல் முழுவதும் பூசி விட வேண்டும். சில நேரம் அதிகமாக மடி வீங்கியிருக்கும். 3 நாட்கள் பால் பீய்ச்சக் கூடாது.

3 நாட்கள் மாட்டை குளிப்பாட்டக் கூடாது.

திரு. அய்யா கோனார், இடையபட்டி, நடுப்பட்டி கிராமம் உத்தப்பநாயக்கனூர் அஞ்சல், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்

**பெத்தாயின் கால்நடை மூலிகை வைத்தியம்**

கண்ணில் வெள்ளை விழுந்தால்:

கடும் புளித்த தண்ணீரில் உப்பு போட்டு கண்ணில் ஊற்ற வேண்டும். பிறகு கள்ளிப் பால் குச்சியை கண் பொட்டில் வைத்து ஒரு ரூபாய் அளவு பால் குத்த வேண்டும். ஒரு நேரம் வைத்தால் போதுமானது.

இளங்கொடி விழுவதற்கு:

ஆலமர சருகு 1/2 கிலோ எடுத்து சுத்தமான தரையில் போட்டு நெருப்பு போட்டு கருக்கவும் இடித்து பொடியாக்க வேண்டும். அப்பொடியுடன் 1/4 படி புளித்த நீராகாரம் சேர்த்து கலந்து கொடுக்க வேண்டும்.

விஷக்கடி வயிறு வீக்கத்திற்கு:

காதின் நுனியை அறுத்து தட்டி விட வேண்டும். அதிலிருந்து விஷம் இரத்தத்துடன் இறங்கி விடும். பின் மாடு கழிந்து நன்கு தீனி எடுக்க ஆரம்பிக்கும்.

மாடு கழிச்சலுக்கு:

வெங்காயம் 200 கிராம், பழம்பாசி இலை 150 கிராம் இரண்டையும் சேர்த்து இடித்து 2 உருண்டையாக பிரித்து காலை, மாலை என 2 வேளை கொடுக்க உடனே கழிச்சல் நின்று விடும்.

ஆடு கழிச்சலுக்கு:

சீரகம் 25 கிராம், பழம்பாசி இலை 50 கிராம், வெங்காயம் 100 கிராம், ஆகியவற்றை இடித்து 2 உருண்டையாக பிரித்து காலை, மாலை என 2 வேளை கொடுக்க வேண்டும்.

திருமதி. பெத்தாயி

சின்ன செம்பட்டி, வெள்ளமலைப்பட்டி அஞ்சல்

உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்

**வெள்ளமலைப்பட்டி மூக்ககம்மாளின் மூலிகை வைத்யம்**

உசிலம்பட்டி தாலுகா, வெள்ளமலைப்பட்டியைச் சார்ந்த மூக்கம்மாள் (71) கடந்த 30 வருடமாக மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவர் 1000 நபர்களுக்கு வைத்தியமும், 1000 நபர்களுக்கு மேல் பிரசவமும் பார்த்திருப்பதாக கூறுகிறார். இவர் சிறு வயதில் கேரளாவில் பிறந்து வளர்ந்ததால் மூலிகைகளை பெரியவர்களிடம் கேட்டு நன்றாக அறிந்துள்ளார். தற்பொழுது வெள்ளாளபட்டியில் தோட்டத்தில் மூலிகை பல வளர்த்து வருகிறார். மேலும் வாத்துக்கூட்டம், ஆடு, கோழி, பூனை, மாடு, நாய் என்று தோட்டத்து வீட்டில் வளர்த்து வருகிறார். இவரிடம் தினமும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை மருந்து சாப்பிட்டு செல்கின்றனர். 1977 ல் கேரளாவில் கோமதி, கருப்பசாமி தம்பதியருக்கு அனுமார் குழந்தை வாலுடன், பல்லுடன் 4.5 கிலோ எடையில் பிறந்தது. பிறந்தவுடன் உட்கார்ந்து சிரித்தது என்கிறார். பின் அதை கூடையில் அடைத்து போட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். செய்தித்தாளில் புகைப்படம் வெளி வந்தது. மறுநாள் வாலை ஆப்ரேசன் செய்யவும் இறந்ததாக கூறுகிறார். எவ்வளவு பிரச்சினைக்குரிய பிரசவத்தையும் எளிதாக பார்த்து விடுவதாகக் கூறுகிறார்.

மஞ்சள் காமாலைக்கு:

கீழாநெல்லி, விடத்தலக்கொழுந்து, அவுரி இலை ஆகியவை வகைக்கு 20 கிராம் எடுத்து நீர்விட்டு அரைத்து பாலில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடிக்கக் கொடுக்க வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 5 நாட்கள் சாப்பிட குணமாகும். முற்றிய வியாதி என்றால் 40 நாள் தொடர்ந்து கொடுக்க வேண்டும். பத்தியம்: நல்லெண்ணெய், கறி, மீன் 40 நாட்களுக்கு சேர்க்கக் கூடாது. சுரைக்காய் பச்சடி செய்து சாப்பிட கண் குளிர்ச்சி ஆகும். கண் மஞ்சள் நிறம் மாறும்.

காச இருமல், சளிக்கு:

நாவல்மர பழக்கொட்டை 1 படி காய வைத்து உடைத்து உள் பருப்பை எடுத்து பொடியாக்கி கொள்ள வேண்டும். வீட்டில் தயாரித்த நெய்யில் 10 கிராம் பொடியை உள்ளகையில் கலந்து சாப்பிட வேண்டும். 4 நாளில் குணம் தெரிய ஆரம்பிக்கும். 8 நாளில் குணமாகும். நோய் அதிகமாக இருந்தால் தொடர்ந்து 15 நாட்கள் சாப்பிட வேண்டும்.

உடல்விருத்தி மற்றும் இரத்தவிருத்திக்கு:

முருங்கை பூ 100 கிராம், தேங்காய் 1 முடி (துருவல்), சின்ன வெங்காயம் 20 கிராம், சிறிது நல்லெண்ணெய் ஊற்றி வதக்கி சுடு சாதத்தில் போட்டு 3 நாட்கள் சாப்பிட வேண்டும். 5 மாத குழந்தைகளுக்கு முருங்கை பூ வதக்கி சாறு எடுத்து 1 சங்கு வீதம் 3 நாட்கள் கொடுக்க வளர்ச்சி மற்றும் இரத்த விருத்தி நன்றாக இருக்கும்.

மாரடைப்பு வராமல் தடுக்க:

மருத மரப்பட்டையை நிழலில் உலர்த்தி இடித்து

தினமும் 10 கிராம் வீதம் தொடர்ந்து சாப்பிட்டு வர நெஞ்சுவலி வராமல் இருக்கும்.

மூலம் : மூலத்தினால் அதிக இரத்தப்போக்கு நிற்க செந்நாயுருவி இலை நறுக்கி கடலை எண்ணெய் சேர்த்து வெங்காயம் சேர்த்து சுடு சாதத்தில் சேர்த்து சாப்பிட வேண்டும். வாத்து முட்டையை பொறித்து சாப்பிட வேண்டும். வாத்து கறி காரமில்லாமல் 3 நாட்கள் சாப்பிட வேண்டும்.

தொக்கம் / வயிற்றோட்டம் :

ஓமம் 5 கிராம், பெருங்காயம் சிறிது, பூண்டு 1 பல், மிளகு 5 , முருங்கைப்பட்டை சாறு 1 சங்கு அரைத்து கொடுக்க வேண்டும்.

சளி காய்ச்சல், இருமல்:

சின்ன வெங்காயம் 1/4 கிலோ இடித்து அதில் 50 கிராம் சீனி சேர்த்து பிசைந்து வடிதட்டில் வைத்து மூடி விட வேண்டும். அடியில் ஒரு பாத்திரம் வைத்தால் வெங்காயம் சீனியில் கரைந்து வடிநீரை சேகரிக்கலாம். அது 1/2 டம்ளர் வடியவும் குடிக்க வேண்டும். திரும்ப அந்த வெங்காயத்தில் சிறிது சீனிபோட்டு பிசைந்து நீர் வடிய விட்டு குடிக்க வேண்டும். இம்மருந்து உடனே இருமலை கட்டுப்படுத்தும். தினமும் ஒரு வேளை வீதம் மூன்று நாட்கள் தொடர்ந்து குடிக்க குணமளிக்கும்.

மலட்டுத்தன்மை நீங்க :

மலைவேம்பு இலை, பூ பட்டை 200 கிராம் எடுத்து 2 லிட்டர் தண்ணீர் ஊற்றி 1/4 லிட்டர் வற்ற காய்ச்ச வேண்டும். இதனை வடிகட்டி 2 வேளை குடிக்க வேண்டும். மாதவிலக்கு நாட்களில் தொடர்ந்து சாப்பிட வேண்டும்.

மூக்கில் ஜலதோசத்தினால் நீர்வடிதல் நிற்க:

வேப்ப இலையுடன் சிறிது ஓமம் அரைத்து சாற்றை மூக்கில் உறிஞ்சி பின் அதை நெற்றியில் பத்து போட வேண்டும். கண், மூக்கில் நீர் வடிந்தால் முனை முறியாத மஞ்சளை வேப்பெண்ணெயில் நனைத்து நெருப்பில் சுட்டு அந்த புகையை உறிஞ்ச சரியாகும்.

வாயு தொல்லைக்கு:

வேலிபருத்தி 5 இலை, கொழுஞ்சி வேர் 2 பட்டை,முக்குறணத்தி வேர் 2 வேர்பட்டை, முருங்கைப்பட்டை 1 விரல் நீளம், பூண்டு 2, மிளகு 2 சேர்த்து அரைத்து சாப்பிட வாயு நீங்கும். தொடர்ந்து வாயுவினால் அவதிப்படுவர்கள் லேகியம் செய்தும் சாப்பிடலாம்.

வாயுக்கு லேகியம் தயாரிக்கும் முறை:

மூக்குற சாரணத்தி வேர் 1/4 கிலோ, முருங்கை பட்டை 1/4 கிலோ, கொளிஞ்சி வேர் 1/4 கிலோ, வேலிப்பருத்தி 1/4 கிலோ இவற்றை காய வைத்து பொடி செய்து கொள்ள வேண்டும். திப்பிலி, தேசாரக்குச்சி, அதிமதுரப்பட்டை, ஓமம், பெருங்காயம், சதகுப்பை, வால்மிளகு, வெள்ளமிளகு, குறுமிளகு, கடுகு ஆகிய ஒவ்வொன்றிலும் 100 கிராம் எடுத்து இடித்து பொடி செய்து கொள்ள வேண்டும். உறித்த பூண்டு 1 கிலோ (இரண்டாக வெட்டிக் கொள்ள வேண்டும்) பனங்கருப்பட்டி 1/4 கிலோ, பனங்கற்கண்டு 1/4 கிலோ, நல்லெண்ணெய் 1/2 லிட்டர்.

நல்லெண்ணெயை சட்டியில் ஊற்றி பூண்டை வதக்க வேண்டும். பின் கருப்பட்டி போட்டு, பனங்கற்கண்டு போட்டு கூழ்போலானவுடன் பின் அதில் வேர், இலை பொடி சிறிது சிறிதாக சேர்த்து கிளறி பின் கடை சரக்கு பொடி போட்டு லேகியமாக்க வேண்டும். கையில் எண்ணெய் தொட்டு லேகியத்தை தொட்டு பார்த்தால் ஒட்டாத பதத்தில் இறக்கி வைக்க வேண்டும்.

ஒரு தூக்கு பாத்திரத்தில் 150 மி.லி நல்லெண்ணெய் ஊற்றி அதில் லேகியத்தை பெரிய நெல்லிக்காய் அளவு உருட்டி போட வேண்டும். ஒரு வருடம் 2 வருடம் வரை இது கெடாது இருக்கும். தேவைப்படும்போது இம்மருந்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

வெறிநாய் கடிக்கு முதலுதவி:

நாயுருவி வேர் சுண்ணாம்பு சேர்த்து அரைத்து கடிவாயில் பூசிவிட வேண்டும்.

எலி கடிக்கு :

கரப்பான் இலை அரைத்து கடிவாயில் கட்ட வேண்டும்.

அரி சிரங்கு:

குப்பைமேனியுடன் மஞ்சள் அரைத்து காலை வேளையில் பூசி சீயக்காய் போட்டு வெந்நீர் போட்டு மாலை குளிக்க வேண்டும். இவ்வாறு 3 நாட்கள் தொடர்ந்து செய்ய வேண்டும்.

அதிக இரத்தப்போக்கிற்கு:

எருமைத் தயிர் 1/2 லிட்டர், அதிமதுரப்பட்டை 10 ரூபாய்க்கு வாங்க வேண்டும்.

அதிமதுரப்பட்டையை 1 லிட்டர் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். ஊறிய நீர் 1/2 டம்ளர் எடுத்து அத்துடன் தயிர் 1/2 டம்ளர் சேர்த்து காலை வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். மாலை ஒரு நேரம் குடிக்க வேண்டும். இவ்வாறு 3 நாட்கள் அதிகமாயிருந்தால் 6 நாட்கள் காலை, மாலை மருந்து குடிக்க வேண்டும்.

பத்தியம் : கருவாடு மீன் சேர்க்கக் கூடாது.

விஷக்கடிக்கு:

இதனால் வட்ட வடிவ தடிப்பாக உடலில் இருந்தால் ஆடு தீண்டாப்பாலை இலையை பாலில் அரைத்து விஷக்கடி மற்றும் புண் இருக்கும் இடத்தில் பூசி விட சரியாகும்.

பல்வலிக்கு:

கண்டங்கத்திரி காய் நெருப்பில் சுட்டு கருகி பொடி செய்ய வேண்டும். அந்த பொடியை பல்வலி உள்ள இடத்தில் அமுக்கி வைத்து அந்த பொடியில் பல் விளக்க வேண்டும்.

சில்மூக்கு புண்ணாகி ஒரு பக்க தலைவலி இருந்தால் எருக்கங்குச்சி நுனியை மூக்கில் விட்டு குச்சியை சுண்டி தட்டிவிட வேண்டும். மூக்கு பழுத்து இருப்பது உடைந்து இரத்தம் வெளிவரும். தலைவலி விட்டு விடும்.

தலைவலிக்கு:

குப்பைமேனி இலையை கசக்கி சாறு எடுத்து மூக்கில் உறிஞ்சி நெற்றியில் பூச வேண்டும். தலைவலி குணமாகும்.

ஆர். மூக்கம்மாள்
வெள்ளமலப்பட்டி, டேவிட் பண்ணை அருகில்
உத்தப்பநாயக்கனூர் அஞ்சல். உசிலம்பட்டி தாலுகா.

## குளத்துப்பட்டி நாகமுத்துவின் மூலிகை வைத்தியம்

குளத்துப்பட்டியைச் சார்ந்த திரு. நாகமுத்து (55) என்பவர் ஓலைச்சுவடியின் மூலம் தனது 30 வயது வயதில் வைத்திய முறைகளை கற்றுக்கொண்டு வைத்தியம் செய்கிறார். இது வரை 1000 நபர்களுக்கு வைத்தியம் செய்திருப்பதாகக் கூறுகிறார்.

ஈளை, இளைப்பு, இறைப்புக்கு:

அறுவகை செயநீர் தயாரிப்பு முறை:

வெடி உப்பு, சீனம், துருசு, நவச்சாரம், பொரிகாரம், சோற்றுப்பு (கரி உப்பு) ஆகிய ஒவ்வொன்றிலும் 50 கிராம் வீதம் எடுத்து அரைத்து அகலமான பீங்கான் பேசன்களின் வைத்து பனிப்புல்லில் இரவு வைத்து விட வேண்டும். உப்பு உருகி பனிபதம் வாங்கி நீராக மாறி பச்சை கலராக அறுவகை செயநீர் கிடைக்கும். துருசு சேர்வதால் பச்சை கலராக இருக்கும். (பௌர்ணமி அன்று வைப்பதால் அதிகளவு நீர் கிடைக்கும்) தாளகம் (பொன் அரிதாரம்) இவற்றை சுண்ணாம்பு கல்லில் ஒரு நாள் வைத்து சுத்திகரிப்பு செய்ய வேண்டும். பின் அதனை குடுவையில் வைத்து மூடி வாய் பகுதியை கரம்பை கொண்டு இருக்க மூடி 7 சுற்று துணி கொண்டு சுற்றி 1 வாரம் காய விட வேண்டும். இதனை அருவகை செய நீர் ஊற்றி தாளகத்தை அரைக்க வேண்டும். பின் அதனுடன் குருமருந்து (முப்பு) சேர்த்து வில்லை தட்டி காய விட வேண்டும். வில்லையை தட்டி பார்த்தால் கனீர் என்று சத்தம் கேட்கும். அந்த பக்குவத்தில் பொடி செய்து கொள்ள வேண்டும். இந்த பொடி அரிசி எடை அளவு எடுத்து அத்துடன் திரிகடுகு சேர்த்து தேன் கலந்து அத்துடன் பசு நெய் அல்லது வெண்ணெய் சேர்த்து 2 அல்லது 3 வேளை சாப்பிட குணமாகும். அதிக வியாதி இருந்தால் 40 நாளில் குணமாகும்.

பத்தியம் : தயிர், மோர், குளிர்ச்சி பொருட்கள், பழங்கள் சாப்பிடக் கூடாது.

## பூச்சியின் கால்நடை மூலிகை வைத்தியம்

திரு. பூச்சி (42) என்பவர் மாடு, மனிதர்களுக்கு நரம்புகளுக்கு மற்றும் மூட்டு விலகல் இரத்தக்கட்டு ஆகியவற்றிற்கு வைத்தியம் செய்கிறார். மூன்று தலைமுறையாக வைத்தியம் செய்கின்றனர். இவர் சிறு வயதில் தனது தந்தையிடமிருந்து வைத்திய முறைகளை கற்றுக்கொண்டு 25 வயதிலிருந்து தனியாக வைத்தியம் செய்ய ஆரம்பித்தார்.

சுளுக்கு / மூட்டுவிலகல்/ இரத்தக்கட்டு:

மாடு வழக்கிக் விழுதல், உழுதல், மிதி பிரண்டால் ஆகியவற்றின் போது சுளுக்கு மற்றும் மூட்டு விலகல் ஏற்படும். சுளுக்கு அல்லது மூட்டு விலகல் ஏற்பட்ட காலை தவிர மற்ற 3 கால்களையும் கயறு கொண்டு கட்டிக்கொள்ள வேண்டும். சுளுக்கு ஏற்பட்ட காலின் குளம்பு பகுதியில் உலக்கை கொண்டு அமுக்கி இழுத்து விடுவர். இதனால் சுளுக்கு அல்லது விலகல் சரியாகும். பின் அந்த இடத்தில் பத்துப்போட வேண்டும்.

மனிதர்களுக்கு சுடுசோறு, நெருப்பு கங்கு, கரியவலம் சிறிது சேர்த்து அரைத்துப் பத்துப் போட வேண்டும்.

### மாடு எலும்பு ஒடிந்தால்

செம்மறிஆட்டு சாணி 100 கிராமுடன் வெள்ளாட்டம்பால் 200 மி.லி சேர்த்து பாலாக்க வேண்டும். இந்த பாலில் துணியை நனைத்து எலும்பு முறிந்த இடத்தில் கட்ட வேண்டும். பின் மூங்கில் தப்பை கொண்டு வைத்து கட்ட வேண்டும். கட்டு

கட்டியவுடன் முதல் நாள் வீக்கம் கொடுக்கும். பின் வற்ற ஆரம்பிக்கும். எலும்பு முறிவு சரியானவுடன் கட்டு களற ஆரம்பிக்கும். 20 நாளில் எலும்பு முறிவு சரியாகும்.

திரு.போ. பூச்சி, உ. வாடிப்பட்டி,
உத்தப்பநாயக்கனூர் அஞ்சல்
உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்

## புண்ணாக்கு கரைசல்

செய்முறை:

கடலை புண்ணாக்கு – ஒரு கிலோ, வேப்பம் புண்ணாக்கு – ஒரு கிலோ, புங்கம் புண்ணாக்கு – ஒரு கிலோ, இலுப்பம் புண்ணாக்கு – ஒரு கிலோ, தேங்காய் புண்ணாக்கு – ஒரு கிலோ, ஆமணக்கு புண்ணாக்கு – ஒரு கிலோ, எள் புண்ணாக்கு – ஒரு கிலோ

இவை அனைத்தையும் தூள் செய்து 20 லிட்டர் கோமியம், நாட்டுசக்கரை 2 கிலோ, வாழைப்பழம் – 30 ஆகியவற்றை சேர்த்து 15 நாட்கள் ஊற வைக்க வேண்டும். அதன் பிறகு இதனைப் பயன்படுத்தலாம். நீர்பாசன நீரில் கலந்து விடுவதாக இருந்தால் பிண்ணாக்கு கரைசல் 50 லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து நீர் பாய்ச்ச வேண்டும். பியிருக்கு தெளிப்பதாக இருந்தால் ஒரு ஏக்கருக்கு பிண்ணாக்கு கரைசல் 25 லிட்டரை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும் (10 லிட்டர் நீருக்கு 250 மி.லி. பிண்ணாக்கு கரைசல் சேர்த்து தெளிக்கவேண்டும்).

## பலதானிய பயிர் விதைப்பு மூலம் பசுந்தாழ் உரம் கொடுத்தல்

நிலத்திற்கு இயற்கை வழியில் ஊட்டம் கொடுக்க பலதானிய பயிர்களை விதைக்கலாம். பலதானிய பயிர் விதைப்பிற்கு தேவைப்படும் பயிர் விதைகள் கொள்ளு, உளுந்து, காராமணி, நெல், கம்பு, சோயா பீன்ஸ், புளியங்கொட்டை, வேப்பங்கொட்டை, பப்பாளி, கொத்தமல்லி, வெந்தயம், கடுகு, சீரகம், தக்கை பூண்டு. அனைத்தையும் சேர்த்து ஒரு ஏக்கருக்கு 27 கிலோ விதைக்கலாம். (வீட்டில் உள்ள விதைகளை அதிகமாகவும் வெளியில் விலைக்கு வாங்குவதை குறைத்தும் சேர்த்துக் கொள்ளலாம்). சிறிய விதைகளை தனியாகவும், பெரிய விதைகளை தனியாகவும் விதைக்க வேண்டும். விதைத்த 45 நாட்கள் கழித்து உழுது மண்ணோடு சேர்க்கவும், இவ்வாறு செய்வதினால் உர செலவு குறையும்.

அல்லது

தானிய வகை – சோளம் 1 கிலோ, கம்பு 500 கிராம், திணை 300 கிராம், சாமை 500 கிராம், வரகு 300 கிராம்.

பயறு வகை – பாசிபயறு 2 கிலோ, உளுந்து 2 கிலோ, கொள்ளு 1 கிலோ, தட்டைப்பயிறு 1 கிலோ, துவரை 1 கிலோ.

எண்ணை வித்து – எள் 500 கிராம், நிலக்கடலை 3 கிலோ, ஆமணக்கு 3 கிலோ, சூரியகாந்தி 1 கிலோ, சோயா 2 கிலோ. வாசனை பொருட்கள் – சோம்பு 200 கிராம், கடுகு 200 கிராம், வெந்தயம் 200 கிராம், மல்லி 500 கிராம்.

உரசெடி விதைகள் – சனப்பு 3 கிலோ, தக்கை பூண்டு 2 கிலோ, கொழுஞ்சி 1 கிலோ, அகத்தி 1 கிலோ, சித்தகத்தி 1 கிலோ.

இவை அனைத்தையும் 25 முதல் 30 கிலோ அளவில் எடுத்து ஓர் ஏக்கர் நிலத்தில் விதைத்து நாற்பதாவது நாளில் மடக்கி உழுதல் வேண்டும்.

## வாசகர் வட்டம்

மாட்டு கன்று குட்டிக்கு உடல் முழுவதும் முடி கொட்டுவதற்கு என்ன வைத்யம்?

கேள்வி: ரஞ்சித், வந்தவாசி

இதற்கு இயற்கை முறையில் குடற்புழு மருந்து 15 நாளைக்கு ஒரு முறை என 3 தடவை கொடுக்க வேண்டும். மற்றும் மசாலா உருண்டை காலை, மாலை என இரு வேளைக்கு தொடர்ந்து ஒரு வாரம் கொடுக்கவும்.

பதில்: பெ. விவேகானந்தன், சேவா

2 வாரத்திற்கு இந்த வைத்ய முறையை கடைபிடித்ததின் காரணமாக முடி உதிர்ந்த இடங்களில் முடி வளர்ச்சி ஏற்பட்டது. திரும்ப அவருடைய எல்லா மாடுகளுக்கு இந்த மருந்தை கேட்டு இருக்கிறார்.

கேள்வி: ரஞ்சித், வந்தவாசி

கேள்வி : பால் மாட்டிற்கு சாப்பாடு போட்டோம் நேற்றும், இன்றும் முழுவதும் தீவனம் எடுக்க வில்லை? மாடு அசை போடவில்லை? இதற்கு மருத்துவர் சில மருந்துகள் கொடுத்தார் ஆனால் மருந்து கொடுத்தபின் எந்த மாற்றமும் தெரியவில்லை இதற்கு இயற்கை முறையில் என்ன வைத்யம் ?

பதில் : பொதுவாக சமைத்த உணவு மாடுகளுக்கு வைக்க கூடாது. அது மனிதர்களுக்கு மட்டும் தான். கூழ் போன்ற சமைத்த உணவுகளை மாடுகளுக்கு கொடுக்க கூடாது. அந்த கூழ் போன்ற உணவுகள் உள்ளே சென்று மாடு அசை போடாமல் இருக்கும் பிரச்சனையை உண்டாக்கிறது. திட பொருள் இல்லாமல் திரவ பொருளாக உள்ள சாதம் வடித்த கஞ்சி கொடுக்கலாம். ஆனால் 2 –3 ஆள் சாப்பிட கூடிய உணவுகள் அளவு கொடுக்க கூடாது. இதற்கு கீழ்கண்ட வைத்ய முறையை பின்பற்றவும்.

கொழுந்து பிரண்டை 3, (கட்டிப் பெருங்காயம் ஒரு சாக்லேட் அளவு), இஞ்சி துண்டு சீரகம் ஒரு ஸ்பூன் (காய்ந்த மிளகாய் 4) அரைத்து ஒரு கைப்பிடி நாட்டு சர்க்கரையுடன் பிசைந்து கொடுக்கவும். ஒரு நாளைக்கு 2–3 வேளை கொடுக்கலாம். இதனால் செரிமான பிரச்சனை குறையும்.


**கால்காணை, வாய்க்காணையினால் வந்த புண்கள் குணமாக என்ன வைத்யம் ?**



மதுரை மாவட்டத்தில் மேலூர் அருகே எம். மலம்பட்டி கிராமத்தில் வசித்து வரும் திரு. முத்துக்குமார் அவர்களின் ஆடு கடந்த ஒரு வாரமாக தீவிரமான வாய் காணை நோய் வந்து வாய்ப்புண்ணினால் மிகவும் சிரமப்பட்டது. பின்னர் நான் பாரம்பரிய மூலிகை கலவையை தயாரித்து கொடுத்தேன். இதனை செய்த பின் 2 நாட்களில் புண்கள் முழுவதும் ஆறி வாயில் புதிய தோல் உருவாகிவிட்டது. இந்த மருந்தை தொடர்ந்து 3 நாட்கள் தடவி வர வேண்டும். கால்காணை, வாய்க்காணைக்கு மூலிகை வைத்யம் செய்த விவரம்:

தேவையான பொருட்கள்:

மிளகு, சீரகம், வெந்தயம் இவை அனைத்தும் ஒரு தேக்கரண்டி, சின்ன வெங்காயம் 10 பல், பூண்டு 10 பல், தேங்காய் 1/2 முடி, குப்பைமேனி இலை 2 கைப்பிடி



அளவு, உப்புகல் 2 தேக்கரண்டி, மஞ்சள் தூள் 2 தேக்கரண்டி இவை அனைத்தையும் பசை போன்று அரைத்து வைத்து கொள்ள வேண்டும். பின்னர் உப்புகல் 1 தேக்கரண்டி, ஒரு எலுமிச்சம்பழம் எடுத்து அதை இரண்டாக நறுக்கி பிழிந்து சாறு எடுத்து இரண்டையும் லேசாக சூடு செய்து வாய் பகுதியை கழுவி உலர்ந்த பிறகு அரைத்த பசை போன்ற மூலிகை மருந்தை காலை மாலை 2 வேளை தொடர்ந்து 3 நாட்கள் தடவி வர வேண்டும். வாய்புண் குணமாகி புதிய தோல் உண்டாகி விட்டது.

வே. அழகுமலை
ஓம்சக்தி நகர், நாகமலைபுதுக்கோட்டை
மதுரை மாவட்டம் –625019, செல் : 6382556078

**மாயாகோஸின் வெள்ளாட்டு சேவை**




மாயாகோஸ் என்ற பெண்மணி மத்தியபிரதேச மாநிலத்தில் டிக்காம்கர் கிராமம் 7 வெள்ளாடுகள் வளர்த்து வருகிறார். இவர் ஆட்டுத்தீவனம் விநியோகம், கால்நடை மூலிகை வைத்யம் செய்தல், கிடா மூலம் ஆடுகளுக்கு இனப்பெருக்கம் செய்து வருகிறார். தன்னிடமுள்ள 2 கிடாக்கள் (பண்டல்காண்டே இரகம்) வைத்து ஒரு நாளைக்கு 25 பெண் ஆடுகளுக்கு இனப்பெருக்கம் செய்து வருகிறார். ஒரு தடவை இனப்பெருக்கம் செய்ய ரூ. 100 பெற்றுக் கொள்கிறார். இவருடைய சேவையைப் பாராட்டி இவருக்கு பீஷ்மர் பரசு 29.9.2025 அன்று வெள்ளாடு அறக்கட்டளை வழங்கியது. மாதம் ஒரு முறை துளசி + வேப்ப இலையை அரைத்து நோய் வரும் முன் காப்பாக ஆடுகளுக்கு கொடுத்து வருகிறார்.

மாயா கோஸ், செல் : 6268272629

## ஜகஸதீஸ் குஜாரின் விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம்



இராஜஸ்தானில் ஆஜ்மீர் மாவட்டத்தில் ஜகதீஸ் குர்ஜார் 1000 பெண்களை உறுப்பினர்களாக்கி உழவர் உற்பத்தியாளர் கம்பெனி நடத்தி வருகிறார். ஆட்டு புழுக்கையை உறுப்பினர்கள் மூலம் கிலோ ரூ. 10க்கு வாங்கி ரூ. 30க்கு மேலாக விற்பனை செய்தல், ஆட்டுப்பால் நித்தமும் 200 லிட்டர் விநியோகத்தல், ஆட்டுக்கடன் வங்கிகளிலிருந்து வாங்கி தருதல், ஆட்டு தீவனம் விற்பனை செய்து வந்ததற்கு பீஷ்மர் விருது 29.9.2025 அன்று வெள்ளாட்டு அறக்கட்டளை மூலம் வழங்கப்பட்டது. சிரோகி என்ற ஆட்டு இனத்தை தேர்வு செய்து மக்களிடையே தருவித்து பெருக்கியுள்ளார்.

ஜகதீஸ்குர்ஜர், செல் : 8094112859

## குளிர்காலத்தில் பாலின் வாசனை கெட்டிருந்தால்

ஹிமாசலாபிரதேசம், பிஹார் போன்ற மாநிலங்களில் குளிர்காலத்தில் பசு, எருமைகளிலிருந்து பீச்சப்படும் பாலின் வாசனை உகந்ததாக இருக்காது. அதாவது பால் வாசனை கெட்டுப்போயிருக்கும். இதற்கு நொச்சி இலை, கருவேப்பிலை , கஞ்சாசெடிஇலை மூன்றையும் சமபங்கு எடுத்து காய வைத்து தூள் செய்து தினமும் ஒரு ஸ்பூன் அளவு உள்ளே தருவர். இதனை 3 நாட்கள் கடைபிடிக்க கெட்ட வாசனை மாறி விடும்.

பீம்சிங், வெள்ளாட்டு அறக்கட்டளை,
லக்னோ
செல் : 7651997573

## கன்மாய்க்கு நீர் வரத்து கால்வாய் வெட்டுதல்



இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, மேலகொடுங்கலூர் கிராமத்தில் 600 ஏக்கர் பரப்பில் கன்மாய் உள்ளது. இதை வைத்து 1000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. இவ்வூரில் 1500 குடும்பங்கள் உள்ளன. இக்கன்மாய்க்கு 3 கிலோ மீட்டர் தூரம் உள்ள நீர் வரத்து கால்வாய் 50 வருடங்களாக ஆக்கிரமிப்பில் இருந்தது. தற்சமயம் ரூ. 6 லட்சம் செலவில் ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாய் வெட்டியுள்ளோம். எங்கள் கிராமத்திலிருந்து விவசாய பங்களிப்பு 3 லட்சமும் தானம் அறக்கட்டளை பங்கு ரூ 3 லட்சமும் பெற்று இதற்காக செலவளித்தோம். வருடா வருடம் இரசீது கட்டை போட்டு ஏக்கர் வாரியாக வசூல் செய்து மடை திறக்கும் 3 நீர் கட்டிகளுக்கு தலா ரூ. 3000 (அந்த அந்த வருடத்தற்கு மாறுபடும்). ஒவ்வொரு வருடமும் ஊர் கூட்டம் போட்டு மடை திறக்கும் விவரம் பேசப்படும். முதலில் ஒரு போக நெல் எடுப்பதற்கு கஷ்டப்பட்டோம். தற்சமயம் 2 போகம் எடுக்கின்றோம்.

இராஜு, செல் : 9790063216

## ஓயாது எழுதியவர் ஓய்வு எடுத்துவிட்டார்



திரு. ஆர்.எஸ். நாராயணன் 7.9.2025 அன்று அதிகாலை இறைவனடி சேர்ந்துவிட்டார். அரசுத்துறையில் பணி ஓய்வுக்குப்பின் தன்னுடைய முழு சக்தியையும் எழுதும் பணியில் ஈடுபடுத்தினார். நம்வழி வேளாண்மை இதழ்களில் வெளிவந்த பாரம்பரிய இயற்கை வேளாண்மை, கால்நடை மூலிகை வைத்ய முறைகளை புத்தக வடிவில் தொகுத்தார். பின் விருக்ஸாயுர்வேதா என்ற ஆங்கில பதிப்பிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து பெருமை சேர்த்தார். தினமணி நாளிதழில் நடுப்பக்க கட்டுரைகள் எழுதி வந்தார்.

இவருடைய இழப்பினால் வாடும் அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்களைத் தெரிவித்து அவருடைய ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.
– விவேகானந்தன், சேவா

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம் ;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய் ; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 10 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடை கிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , செல்–9344523892

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------

------------------------------------

------------------------------------

------------------------------------

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 9344523892
Email : vivekseva@gmail.com
website : www.sevango.in